www.tamilarangam.net

# தளிர்

தை - பங்குனி - 1986 விலை:- ரூபா 4-00



தொலைதூர விடிவிளக்கு;
நீண்டதொரு வழிப்பயணம்
தெருவெங்கும்,
கண்ணி வெடி சிதறி
நிலம் அதிர
ஆயிரம் கரங்களும்
ஆயிரம் விழிகளும்
திக்குகளெங்கும் சுடரப்

போர் புரியப் போனார்கள்
புதல்வர்கள்!

குருதிப் பகைப் புலத்தில்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு உடல் வருகிறது.

இழப்புகளிலிருந்து
உயிர் பெற்றெழும்
ஒரு புதிய தேசத்திற்காகத்
தாய் நிலம் பிளந்து

இன்னும் புதல்வர்களைத்
தா அம்மா!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தளிர்

திரள்:- 3 இல:-10,11,12

தை—பங்குனி 1986

விலை ரூபா:- 4-00


## உள்ளே


- ஐக்கிய முன்னணி, வெகுஜன ஸ்தாபனங்களை அமைப்பாக்குதல், புரட்சிகர வரிவிதிப்பு மற்றும் நமது உடனடிக் கடமைகள் பற்றி.........
- தமிழீழத்திலிருந்து திசைமாறலாமா?
- சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வோமா?
- ஒரு கறுப்பனின் கடிதம்
- நவகாலனித்துவம்-5
- பங்களாதேஷ் விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஓர் ஒப்பீடு
- வன்னி மண்ணில் தொடரும் அவலங்கள்
- பிலிப்பைன்ஸ் தேர்தல் மக்கள் சக்திக்கஞ்சி அமெரிக்கா கண்ட சமரச நாடகம்


## தொடர்புகட்கு


"தளிர்"

ஆசிரியர் குழு

யாழ்-பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.


## வாசகர்களுக்கு

- தளிர் பற்றிய கருத்துக்களையும் உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பொருளாதார சமூக கலாச்சார நிலைமைகள் பற்றிய ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
- தவிர்க்கமுடியாத காரணங்களால் இவ் இதழினை குறிப்பிட்ட திகதியில் வெளியிடமுடியவில்லை.

## நெறிப்படுத்திக் கொள்வோம் !

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பல பரிமாணங்களை அடைந்து வளர்ச்சியடைந்து வரும் இவ் வேளை எம்மவர்களின் சில நடவடிக்கைகள் போராட்டத்தில் இருந்து மக்கள் அந்நியப்படுவதற்கு வழிகோலி விடுகின்றன. மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் விடுதலை இயக்கங்களால் மேற்கொள்ளப்படும் போது மக்கள் போராட்டத்தின் மீது அதிருப்தியடைந்து தாமாகவே போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு விடுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றன. இந்த வகையில் ஊர்வலத்தில் வந்த மக்கள் மீது நல்லூர் முத்திரைச் சந்தையடியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்ததும் எண்மர் காயமடைந்ததும் மக்கள் விரோத நடவடிக்கைகள் உச்ச நிலையை அடைந்துள்ளன என்பதை குறித்து நிற்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் புரட்சிகரமானது. தென்னாசியப் பிராந்திய மக்களின் விடிவிற்கு வழிகாட்டக்கூடியது. இப் போராட்டம் சரியாக நெறிப்படுத்தப்பட்டு உரிய திசையினை போராட்டம் சென்றடையாவிடின் நாம் எமது மக்களுக்கு மட்டுமன்றி தென்னாசியப் பிராந்தியத்திற்கே துரோகமிழைத்தவர்கள் ஆகிவிடுவோம். எனவே விடுதலை ஸ்தாபனங்கள் இவற்றைப் புரிந்து கொண்டு செயற்படுதல் அவசியமானது.

இன்றுள்ள நிலையில் எமது போராட்டச் செயற்பாடுகள் மூன்று விதங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. ஸ்ரீலங்கா இராணுவத்தினை ஆயுத ரீதியில் வெற்றிகொள்ளுதல்
2. மக்களை ஜனநாயக அடிப்படையில் ஒன்றுதிரட்டி அமைப்பாக்குதல்.
3. இந்திய அரசினை இராஜதந்திர ரீதியில் எமக்குச் சார்பாக வென்றெடுத்தல்.

இவை மூன்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட தலைமையில் ஒன்றாகச் செய்யப்பட வேண்டியவை. எனவே எமது போராட்டத்தின் வெற்றி கருதி எம்மிடையே உள்ள தவறுகளைத் திருத்தி எம்மை நெறிப்படுத்திக்கொள்வோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தகவற்சேவை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று வரும் விடுதலைப் போராளிகள் அண்மைக் காலத்தில் பல இடங்களிலும் பல பாரிய தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். இத் தாக்குதல்களில் பல சிப்பாய்கள் மரணத்தைத் தழுவிக்கொள்வதோடு அவர்களை வழிநடத்தும் பல உயர் அதிகாரிகளும் மரணம் அடைகின்றனர். இவ்வாறான அரச உயர் அதிகாரிகளின் இழப்புகள் சிறீலங்கா இராணுவத்தை நிலை குலையச் செய்து வருகின்றன. இந்த வருடத்தில் (1986) தை மாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரை தமிழீழ விடுதலைப் போராளிகளின் வீரம்செறிந்த தாக்குதலின் போது மரணமுற்ற அரச உயர் அதிகாரிகளின் பெயர் விபரப் பட்டியலில் எம்மால் திரட்ட முடிந்தவற்றை இங்கே தொகுத்துத் தருகிறோம்:-

| திகதி | தாக்குதல் நடந்த இடம் | உயர் அதிகாரிகளின் பெயர் விபரம் | தாக்குதலில் ஈடுபட்ட இயக்கம் |
|---|---|---|---|
| 6-1-86 | ஓமந்தை பறநாட்டான்கல் | கஜபாகு ரெஜிமண்ட் மேஜர் மில்றோய்பெர்ணாண்டோ | ஈ.பி.ஆர். எல். எவ் |
| 9-1-86 | உடையார்கட்டு முல்லைத்தீவு | லெப்டினண்ட் கோப்ரல் ஏ. ஏ. எல். அருணகாந்த | விடுதலைப் புலிகள் |
| 15-1-86 | ஈச்சந்தீவு ஆலங்கேணி திருமலை | கடற்படை லெப்டினண்ட் கேணல் சாந்தி பகார் | ஈ.பி.ஆர். எல். எவ் |
| 19-1-86 | இருதயபுரம் மட்டக்களப்பு | உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் முதியான் சலாகே தர்மசிறி (STF) | விடுதலைப் புலிகள் |
| 21-1-86 | முல்லைத்தீவு மாங்குளம் வீதி | இராணுவ லெப்டினண்ட் ஜெகன் பெரேரா | |
| 22-1-86 | தந்திரமலை மன்னார்-மதவாச்சி வீதி | ஒரு இராணுவ கொமாண்டர் | ஈ.பி.ஆர் எல்.எவ் |
| 23-1-86 | தெல்லிப்பளை | இராணுவ கோப்ரல் கருணநாயகா | விடுதலைப் புலிகள் |
| 23-1-86 | தெல்லிப்பளை | அவ்ரோ (AVRO) விமானி திசாநாயகா | விடுதலைப் புலிகள் |
| 22-1-86 | மாந்தை (மன்னார்) | 2 இராணுவ லெப்டினண்ட் கள் | விடுதலைப் புலிகள் |
| 30-1-86 | தர்மபுரம் கிளிநொச்சி | மாத்தறையைச் சேர்ந்த ஒரு இராணுவ லெப் டினண்ட் | விடுதலைப் புலிகள் |

(தொடர்ச்சி 29-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐக்கிய முன்னணி,
## வெகுஜன ஸ்தாபனங்களை அமைப்பாக்குதல், புரட்சிகர வரிவிதிப்பு மற்றும் நமது உடனடிக் கடமைகள் பற்றி . . .

கவிதா

நமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிகவும் சிக்கலானதும் முக்கியமானதுமான காலகட்டத்தை அண்மித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது உணரக் கூடியதாக உள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் எல்லைகள், இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும் மீறி சர்வதேச அரசியல் மட்டங்களிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. வல்லரசுகள் எதுவும் இதுவரையில் நேரடியாகப் புகுந்து கொள்ளவில்லையே தவிர வல்லரசுகளின் மறைமுகமான ஆனால் வலுவான ''பங்களிப்புகள்'' இருந்து வருகின்றன.

இந் நிலையில் நமது கடமைகள் முக்கியமான மூன்று தளங்களில் அமைய வேண்டும்.

1. சர்வதேச ரீதியில் இனப்படு கொலைக்கு எதிரானதும் நமது போராட்டத்துக்குச் சாதகமானதுமான அபிப்பிராயத்தை வலுப் பெறச் செய்தலும், அதனை உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு வளர்த்தெடுத்தலும். இவ் வகையில் அண்மையில் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் என்றும் இல்லாத வகையில் சிறிலங்கா அரசு அம்பலப்படுத்தப்பட்டது. (எனினும் மனித உரிமைகள் என்ற தளத்தில், சிறீலங்கா அரசு தன்னுடைய முகத்தைக் காப்பாற்றும் முயற்சிகளை விடுத்து விடுதலை இயக்கங்களும் மனித உரிமைகளை மீறுகின்றன என்று குற்றச் சாட்டுகளை அடுக்கி வருகிறது)

2. இந்து சமுத்திரப் பகுதியில், பூகோள அரசியலைப் புரிந்து கொண்டு (சீனு பாகிஸ்தான்- பங்களாதேஷ்- இலங்கை ஒரு அணியிலும் நாமும் இந்தியாவும் ஒரு அணியிலும் நிற்கிறோம்) தமிழீழத்தை அங்கீகரிப்பதில் இந்தியாவுக்குள்ள இடர்ப்பாடுகளை நீக்கவும்— இந்தியாவை நமது கருத்துக்கு மேலும் நெருங்கி வரும் வகையில் இந்தியாவை ராஜதந்திர ரீதியில் நெருக்கவும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.

3. தமிழீழம் அடங்கிலும் மக்களை ஜனநாயக ரீதியில் வென்றெடுப்பதும் பல்வேறு வெகுஜன ஸ்தாபனங்களை விடுதலை ஸ்தாபனங்களுடன் ஒரு ஐக்கிய முன்னணிக்குக் கொண்டு வருவதும் அதன் மூலம் தேசிய விடுதலைப் போராட்டத்தை பிரதேச, கிராமிய ரீதியில் தேசியப் புனருத்தாரணமாக வளர்த்தெடுப்பதற்கு முன்னெடுப்புகளை ஏற்படுத்துதல்.

இந்த மூன்று கடமைகளிலிருந்தும் நாம் தவறிவிட முடியாது. ஏனெனில் இவற்றை நிறைவேற்றாது விடுதல் என்பது விடுதலைப் போராட்டத்தைப் பின் தள்ளுவதற்கு நாமும் உடந்தையாக இருந்தோம் என்று ஆகி விடும்.

எமது இன்றைய சூழ்நிலையில்- அதுவும் குறிப்பாக விடுதலை இயக்கங்களின் ஐக்கியம் என்று வருகிற பொழுது நிலவும் துரதிர்ஷ்டமான சூழல் மனதை வருத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவதாகும். மிகவும் பேசப்படுகிற நிக்கரகுவா நாட்டில் இதே போன்ற ஒரு சூழ்நிலையை அவர்கள் எவ்வாறு வெற்றிகரமாக எதிர் கொண்டு தேச விடுதலையை வென்றெடுத்தார்கள் என்பதை அறிந்து கொள்வது எமக்குப் பயன் தரும் என்று கருதுகிறேன்.

மூன்றாம் உலக நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டம், அந்நாடுகளின் தேசிய உணர்வில் தங்கியிருக்காவிட்டால் வெற்றி பெற முடியாது என்பதை நிக்கரகுவா எமக்கு உணர்த்துகிறது. நிக்கரகுவாவின் FSLN- சீன, வியட்நாம், கியூப அனுபவங்களிலிருந்தும் சரியான முறையில் நிக்கரகுவா தேசிய வாதத்தில் அவ்வனுபவங்களை இணைத்துக் கொண்டதுமே அதன் வெற்றிக்குக் காரணம்.

ஆரம்பத்தில் ஸாண்டினோவின் வெறும் தேசிய வாதத்திற்கும் பின்னர் ஸாண்டினிஸ்டுக்களான FSLN இன் புரட்சிகர தேசிய வாதத்திற்கும் குணும்ச ரீதியான வேறுபாடுகள் இருந்தாலும் ஸாண்டினோவின் தேசிய வாதத்தின் வளர்ச்சியே அது என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்

ஆரம்பத்தில் வெறுமனே ஆயுதங்களை மட்டுமே நம்பியிருந்த, FOCO வழிமுறையை மட்டுமே பயன்படுத்துகிற அமைப்பாக FSLN இருந்த போதும் அமைப்புக்குள் நடைபெற்ற ஆரோக்கியமான வாதப் பிரதிவாதங்கள், உட்கட்சிப் போர்களுக்குப் பிறகு ஆயுதப் போராட்டத்தையும், வெகு ஜனங்களை அமைப்பாக்கி வெகுஜன ஸ்தாபனங்களுடாக இணைப்பதையும் நடைமுறையாகக் கொண்டனர். இதற்கு புரட்சிகர தேசிய வாதமும், சர்வாதிகாரி சோமே ஸாவிற்கு எதிரான அவர்களது போராட்டமும் துணை புரிந்தது

புரட்சிகர தேசிய வாதம் பற்றி ரெஜிஸ் டீப்ரே குறிப்பிடுவதை இங்கு நினைவில் கொள்ளுதல் பொருத்தமாகும். (ரெஜீஸ் டீப்ரேயின் பல கருத்துக்களுடன் எனக்கு முரண்பாடுகள் உண்டு. எனினும் மூன்றாம் உலக நாடுகள் குறிப்பாக லத்தின் அமெரிக்க நாடுகளின் புரட்சியில் தேசிய வாதம் வகிக்கும் பங்கு பற்றி அவரது கருத்துக்கள் முக்கியமானவை மட்டுமல்ல, பாரம் பரிய மார்க்ஸிஸ்டுகளின் ஆயலாமையை முற்றிலுமாக அம்பலப்படுத்துகின்றன)

''புரட்சிகர தேசிய வாதமே இன்றைய லத்தின் அமெரிக்காவில் சோஷலிஸப் புரட்சியின் ஒரு திசை மார்க்கமாகும். நீண்ட கால வரலாறும் பெருமையும் இல்லாத எந்த ஒரு தேசமும் தனது வரலாற்று நோக்கை இழந்து விட நேரும். ஏகாதிபத்திய பூகோள- அரசியல் சூதாட்டத்திற்குப் பலியான நிக்கரகுவாவின் புரட்சிகர தேசிய வாதமே ஸாண்டினிஸம்'' (ரெஜிஸ் டீப்ரே செப்டம்பர் 1979)

இவ் வடிப்படையில் புரட்சிகர தமிழ் ஈழத் தேசிய வாதத்தை இன்னும் அங்கீகரிக்காத, அங்கீகரித்தும் அதற்காகப் போராடாத 'இடதுசாரி' ஸ்தாபனங்களை, முழு இலங்கைத் தேசியத்தை மட்டும் வலியுறுத்தும் ஸ்தாபனங்களை நாம் நிராகரிக்கிறோம்.

## II

1976 இல் சர்வாதிகாரியும் அமெரிக்கக் கைப்பொம்மையுமான ஸோமோஸாவினால் மேற்கொள்ளப்பட்ட AQUILA- 6 என்று பெயரிடப்பட்ட பெரிய ராணுவத்தாக்குதல் (Operation) FSLN ஐ மிகவும் பாதித்தது. மிகவும் குறைந்த அளவிலேயே FSLN போராளிகள் தப்பிப் பிழைத்தனர். கார்லோஸ்ஃபொன்சேகா எனும் முக்கியமான தலைவர் கொல்லப்பட்டார். முக்கியமான முன்னொருவர் தோமஸ்போர்ஜ் சிறையிடப்பட்டார். இந்நிலையில் FSLN இற்குள் மூன்று வகையான போக்குகள், தமக்குள் மோதிக் கொள்ளும் அளவிற்கு வளர்ந்திருந்தன.

### 1 நீண்ட கால மக்கள் யுத்தம் என்ற கோட்பாட்டின் வழி நின்றவர்கள்.

இவர்கள் மாவோயிஸ்ட் சிந்தனை கொண்டவர்களாகவும் வியட்னாமிய அனுபவத்தை முதன்மைப்படுத்துபவர்களாகவும் இருந்தனர். இவர்களின் கொள்கைப்படி கிராமப் புறங்களை மையங் கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொரில்லாத் தாக்குதல்கள், விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களை, மலைப்பகுதிகளில் உருவாக்குதல், பின்னரே நகர்ப்புற கொரில்லா நடவடிக்கைகளுக்கு விஸ்தரித்தல் என்பது செயல்முறை. இத்தகைய விடுதலைப் பிரதேசங்களை அமைப்பதிலேயே முழுக் கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்றும் நகர்ப்புறங்களில் மாணவர்களிடமும் மக்களிடமும் வேலை செய்வது என்பது பிரதானமாகக் கிராமப்புறக் கொரில்லா அணிகளுக்கு ஆட்சேர்ப்பது என்ற வகையிலேயே இடம் பெற வேண்டும் என்று கருதினார்கள்.

## 2 பாட்டாளி வர்க்கப் போக்கை பிரதிபலித்தவர்கள்

இவர்கள் பெருமளவிற்குப் பாரம்பரிய மார்க்ஸிஸ்டுகளின் நிலைப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள். நகர்ப்புறப் பாட்டாளிகளும் மாணவர்களுமே முக்கிய பங்காற்ற முடியும் என்று கருதினார்கள். இவர்களுடைய கருத்துப்படி நீண்டகால மக்கள் யுத்தப் போக்கானது, சூழலியல் ரீதியாகத் தனிப்படுத்துகைக்கு உள்ளான கிராமங்களில் போராட்டமும் தனிமைப்படுத்தப்பட வழிவகுக்கும் என்பதாகும். மற்றும் வீரசாகசச் செயல்களை எதிர்த்தனர்.

## 3. *TERCERISTAS* அல்லது வெகுஜனக்கிளர்ச்சியில் நம்பிக்கை கொண்டவர்களே

மூன்றாவது பிரிவினர். இவர்களை ஒருவகையில், காஸ்ட்ரோயிஸ்டுகள் என்றும் அழைக்கலாம். இவர்கள் போராட்டத்தில் தேசியத் தலைமையை வலியுறுத்தினர். இவர்கள் முதலிரு பிரிவினரையும் 'தொழிற்படாத சக்திகள்' எனக் கூறினர். ராணுவவேலைகளும் அரசியல் சுதந்திரமும் பாதிக்கப்படாத வரை ஸோமோஸாவை எதிர்க்கும் பூர்ஷ்வா வர்க்கத்தினரோடு கூட இணங்கிப் போவது அவசியம் என்று தந்திரோபாய ரீதியில் கருதினர்.

இந்த மூன்று போக்குகளினதும் ஆதரவாளர்களிடையே பலத்த கருத்து மோதலும் பிளவுகளும் இருந்த போதிலும் FSLN உடையவில்லை. இத்தகைய ஒரு முக்கியமான கட்டத்தில் FSLN பிளவுபட நேர்ந்திருந்தால் இன்றுள்ள நிக்கரகுவாவை நாம் கண்டிருக்க முடியாது. FSLN இல் உடைவு ஏற்படாமல் தடுத்த பிரதான காரணி-போராட்டத்தின் புறச் சூழ்நிலையாகும். ஸோமோஸாவின் ஆட்சியின் பயங்கரமும், மக்களுடைய அபரிமிதமான வெறுப்பும், FSLN இன் மீது அவர்களது நம்பிக்கையும் FSLN ஐ உடைவில் இருந்து காத்தது எனலாம். FSLN போராளிகள் உடைவைத் தடுத்தது மட்டுமல்லாமல் மூன்று வகையான போக்குகளையும் தன்மயமாக்கி ஒரு வகைத் தொழிற் பங்கீட்டு முறையையும் ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றனர்.

TERCERISTAS, ராணுவ வேலைகளையும் ஏனைய இரு பிரிவினர் மக்கள் அமைப்புக்களையும் பொறுப்பேற்றனர். மூன்று பிரிவினரையும் கொண்ட ஒரு இணைப்புக் குழுவை FSLN மார்ச் 1979 இல் ஏற்படுத்தியது. மூன்று போக்குகளிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் என மொத்தம் 9 பேர் கொண்ட ஒரு தேசிய ஆணைக்குழுவை உருவாக்கினார்கள். இந்த ஆணைக்குழுவில் Terceristas பிரிவிலிருந்து டானியல் ஒட்டேகா (இப்போதைய நிக்கரகுவா ஜனாதிபதி) ஹம்பேர்ட்டோ ஒட்டேகா (இப்போதைய நிக்கரகுவா பாதுகாப்பு அமைச்சர்) ஆகியோரும் நீண்டகால மக்கள் யுத்தம்-பிரிவிலிருந்து தோமஸ் போர்ஜும் பாட்டாளி வர்க்க போக்கிலிருந்து ஜயமி விலொக்கும் முக்கிய மானவர்கள்.

இம் மூன்று பிரிவினரும் பரஸ்பரம் விமர்சனம். சுயவிமர்சனம் என்பவற்றைப் பரிமாறிக் கொண்டனர். அதன்படி. நீண்டகால மக்கள் யுத்த பிரிவினர் ராணுவ வேலைகளையும் கிளர்ச்சியின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட்டதை ஒப்புக் கொண்டனர். அதேநேரம் கிராமப்புறக் கொரில்லா அணிகளினால் FSLNஇற்குக்கிடைத்த அரசியல்.ராணுவ வெற்றிகளையும் சுட்டினர் Terceristas மக்களை அமைப்பாக்குதல், மக்கள் பங்குபெறுதல் என்பவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். பாட்டாளி வர்க்கப் போக்கினர் தமது பாரம்பரிய. வறட்டு மார்க்ஸிஸ்ட் நிலைப்பாட்டின் பயனின்மையினை உணர்ந்து கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நிலைமைகளை நாம் இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டச் சூழலில் விளங்கிக் கொள்வது மட்டுமல்ல இப்போது உடைந்திருக்கும் விடுதலை இயக்கங்களை ஐக்கியப்படுத்துவதை முன்னெடுக்க வேண்டும்.

நிக்கரகுவாவில் போராட்டத்தின் இறுதிக் கட்டங்களில்கூட, அங்கு பாரம்பரிய இடதுசாரிக் கட்சியாக விருந்த நிக்கரகுவா சோஷலிஸ்ட் கட்சி (இது சோவியத் யூனியன் ஆதரவு பெற்றது) போராட்டத்தைச் சமரசப்படுத்தவே முயன்றது. ஸோமோஸாவின் ஆட்சியுடன் ஒரு 'தேசிய ஒற்றுமை அரசு'க்கு வரும்படி FSLNஐ அழைத்தனர். FSLNஐ அதி தீவிரவாதிகள் என வர்ணித்தனர். இங்கும் கூட பாரம்பரிய இடதுசாரிகள் இத்தகைய நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர் என்பது ஆச்சரியம் தருவதல்ல. ஏனென்றால் தமது புத்தக, கோட்பாட்டு வரையறைகளுக்கு அப்பால் செல்லத் தெரியாதவர்கள் அவர்கள். நிக்கரகுவாவைப் பொறுக்க வரை FSLNஐ சோவியத் யூனியன் ஆட்சி வெற்றி பெறும் வரை ஆதரிக்கவில்லை. கியூபா மட்டுமே பலவழிகளிலும் ஆதரித்து வந்தது.

நிக்கரகுவாவின் இத்தகைய அனுபவம் எமக்கு நிறையப் பாடங்களைக் கற்பிக்கிறது. பிரதானமாக, போராட்டம் வெற்றியை நோக்கிய பிரதான எட்டுகளை வைக்கிற போது ஸ்தாபனங்கள் உடையக் கூடாது; உருக்குப் போன்ற ஐக்கியத்தைப் பேண வேண்டும். வெகுஜனங்களின் கிளர்ச்சியையும் தன்னெழுச்சியான போராட்டங்களையும் அரசுக்கெதிராகவும், விடுதலை இயக்கங்களை ஒன்று திரட்டும் வகையிலும் ஒழுங்காக்குதல்.

நமது போராட்டச் சூழலில் விடுதலை இயக்கங்களுக்கிடையே இணக்கமின்மை என்பது போராட்டம் குறித்து மக்களின் மனோ நிலையை பாதிக்கிறது என்பதும் இப்பாதிப்பு சமரசப் போக்குகளை ஊக்குவிக்கும் என்பதனையும் பாராளுமன்றக் கட்சிகள், பாரம்பரிய இடதுசாரிகள், இந்திய அரசு, உள்ளூர் பிரஜைகள் குழுக்கள் மற்றும் முன்னாள் அரசியல் பிரமுகர்கள் போன்றவர்களின் கரங்களைப் பலப்படுத்தும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். போராட்டத்தில் தாமும் பங்காளிகள் என்று மக்கள் உணர்ந்து கொள்ளாத வரை விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்குமிடையே ஒரு மெல்லிய இடைவெளி இருக்கும்.

1979 இல் நிக்கரகுவாவில் ஸான்டினிஸ்டுகள் ஆட்சிக்கு வரும் வரை நிகழ்ந்த சகல மக்கள் போராட்டங்களும் (ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், சட்டமறுப்பு, ஹர்த்தால் வீதித்தடை போன்றன உட்பட) FSLN வழிகாட்டலின் கீழ் இயங்கிய வெகுஜன ஸ்தாபனங்களாலேயே முன்னெடுக்கப்பட்டன. இங்கு என்ன நிகழ்கிறது? கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் என்று பலநிலையிலும் வெகுஜன அமைப்புக்கள் உள்ளன. போராட்டங்களிலும் ஈடுபடுகின்றன. எனினும் விடுதலை இயக்கங்களுக்கும் அவற்றுக்கும் இடையே எவ்விதமான ஒருங்கமைவும் இல்லை. மாறாக, சில சந்தர்ப்பங்களில் விடுதலை இயக்கங்களுக்கு எதிராகவே மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் கண்டுள்ளோம்

பலவிடுதலை இயக்கங்கள் உள்ள நிலையில் வெகுஜன அமைப்புக்கள் எவ்வாறு விடுதலை இயக்கங்களோடு அணி திரள்வது என்ற சிக்கல் எழ இடமுண்டு. உண்மையில், வெகுஜன அமைப்புக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் உள்ள இடையறாத உறவின் மூலம் விடுதலை இயக்கங்களிடையேயும் குறைந்த பட்சப் புரிந்துணர்வுடனாவது ஒரு ஐக்கிய முன்னணி சாத்தியம். இத்தகைய ஒரு ஐக்கிய முன்னணி இன்றைய அவசரமான தேவை என்பது மிகவும் பரவலாக உணரப்படுகிறது. இந்த ஐக்கிய முன்னணி ராணுவ நடவடிக்கைகளில் தான் இல்லையென்றாலும் குறைந்த பட்சம் அரசியல்புரிந்துணர்விலாவது இல்லையென்றால் அது மிகவும் பாதகமானது. அண்மைக் காலங்களில் சந்தர்ப்பம், சூழ்நிலைகள் சில கூட்டு ராணுவ நடவடிக்கைகளில் இயக்கங்களை ஈடுபட வைத்தன. (சுதுமலை, தெல்லிப்பழை போன்ற சம்பவங்கள்) போர் முனையில் உடனடி ஐக்கியம் சாத்தியம் என்பது உண்மையே. எனினும் வேலைத்திட்ட அடிப்படையிலான உடன்பாடும் புரிந்து கொள்ளலு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மில்லாத ஒரு ஐக்கியம் விஞ்ஞான பூர்வமானதாக இருக்க முடியாது.

## III

ஒரு ஐக்கிய முன்னணியின் தேவை என்பது அமைப்புக்களின் நிதி நிலைமை, உள்ளூர் பொருளாதார உற்பத்தி, ராணுவ நடவடிக்கைகளின் பரவலாக்கம் அல்லது போர்முனையை அகலப்படுத்தல் போன்றவற்றையும் பாதிக்கிறது. உதாரணமாகப் புரட்சிகர வரிவிதிப்பை எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய ஒரு வரி விதிப்பை சில பிரதேசங்களிலாவது செய்ய முடிகிறது என்பது மிகவும் நல்ல விஷயம். ஆனால் இந்த வரிவிதிப்பு புரட்சிகரமானதா என்பது அது எவ் வர்க்கத்தின் நலன்களைச் சார்ந்தது என்பதிலேயே தங்கியுள்ளது.

ஒன்பது வருடங்கள் பிலிப்பைன்ஸ் சிறையிலிருந்த பத்திரிகையாளரும், புதிய மக்கள் ராணுவ (NPA) புரட்சியாளருமான **SATUR OCAMPO** வின் பேட்டியொன்று அண்மையில் **FAR EASTERN ECONOMIC REVIEW** வில் வெளிவந்தது **SATUR OCAMPO** 1985 மே மாதம் 15ம் திகதி மணிலாவிலுள்ள பத்திரிகையாளர் சங்கத்துக்குச் சென்றுவர அனுமதிக்கப்பட்ட போது தப்பிச்சென்றார். அதன் பின்னர் தலைமறைவாக இருந்த அவர் இப் பேட்டி மூலம் தன்னை வெளிப்படுத்தினார். NPA யின் நிதி நிலைமை பற்றிய ஒரு கேள்விக்கு அவருடைய பதில் பின்வருமாறு:

"கொள்கையளவில் புரட்சிகர இயக்கங்கள் நிதிக்கு மக்களிடமே தங்கியிருக்க வேண்டும் ஆனால் பிலிப்பைன்ஸ் போன்ற மோசமான பொருளாதார நிலையில் உள்ள நாடுகளில் மக்கள் ஆதரவு எவ்வளவுதான் அதிகமானதாக இருந்தாலும் கிடைக்கக்கூடிய நிதி ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தைக் கொண்டு நடாத்தப் போதுமானதல்ல. இந் நிலையில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் புரட்சிகர வரிவிதிப்பு என்று நாம் அழைக்கும் செயல் முறை அமுலில் உள்ளது. இப் புரட்சிகர வரி விதிப்பின் அடிப்படையான அம்சம் என்னவெனில் பெரிய கூட்டுத்தாபனங்கள் (பிறநாட்டினதாயினும் சரி, உள்நாட்டினதாயினும் சரி)-அவை தேசிய வளத்தையும் மனித உழைப்பையும் சுரண்டுகின்றன எனும் அடிப்படையில் பெற்றுக் கொள்வது.

இந்நிலையில் புரட்சுர வரிவிதிப்பு என்பது உண்மையில் அந்நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளும் லாபத்தில் ஒரு பகுதியை அறவிடுவது ஆகும். இப் புரட்சிகர வரி விதிப்பு எவ்வளவு தூரம்சரியாக வெவ்வேறு பிரதேசங்களில் அமுல் நடத்தப்படுகின்றது என்பது எனக்குத்தெரியாது. எனினும் அடிப்படையில்சுரங்கங்கள், பெருமளவில் மரங்களை வெட்டும் இடங்களை நடத்தும் நிறுவனங்களிடமிருந்து இவ்வரி அறவிடப் படுகிறது"

ஒரு புரட்சிகரமான வரி விதிப்பு முறை நமது சூழலிலும் அவசியம் என்று உணரப்பட்டுள்ளது எனினும் இவ்வரிவிதிப்பின் அடிப்படை சாதாரண மக்களிடமிருந்து மேலதிக பணத்தை அறவிடுவதாக அமைய முடியாது. மாறாக நமதுதேசிய முதலாளிகளிடமிருந்து லாபத்தில்ஒரு பகுதியை அறவிடுவதாகவும் சிறிலங்காவின் தரகு முதலாளிகளாகவும் ஏஜண்டுகளாகவும் இங்கு பணியாற்றுபவர்களிடமிருந்து அவர்கள் பெறும் லாபத்தில் ஒரு பகுதியை அறவிடுவதாகும்.

கூலி, விலை, இலாபம் பற்றிய அடிப்படை மார்க்ஸியக் கண்ணோட்டம் இல்லாமல் புரட்சிகர வரி விதிப்பை அமுல் நடத்துவது நமக்குப் பாதகமானதாக அமையும்.

"ஒரு பண்டத்தின் மதிப்பு அதில் அடங்கியுள்ள உழைப்பின் ஒட்டு மொத்தமான அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் அந்த உழைப்பின் அளவில் ஒரு பகுதி, கூலி வடிவத்தில் ஈடு செலுத்தப்பட்ட மதிப்பாகச் செயலாக்கப்படுகிறது. மறு பகுதியோ, எவ்வகையான ஈடும் செலுத்தப்படாத மதிப்பாகச் செயலாக்கப்படுகிறது அதாவது பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பில் ஒரு பகுதி ஊதியம் பெற்ற உழைப்பு, மறுகூறு பகுதி ஊதியம் பெறாத உழைப்பு, எனவே பண்டத்தை அதன் மதிப்பிற்கே அதாவது அதில் உருவாக்கப்பட்டிருக்கும் உழைப்பின் ஒட்டுமொத்தமான அளவிற்கே விற்பதால் முதலாளி நிச்சயமாக இலாபத்திற்கே விற்பான். (கார்ல் மார்க்ஸ்; கூலி, விலை, இலாபம் எனும் நூலிலிருந்து) (15ம் பக். பார்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்திலிருந்து திசைமாறலாமா?

ஜெயந்தன்

இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு ஒழுங்கின்மையும் ஸ்தம்பிதமும், ஏற்பட்டுள்ளது என்ற உண்மையை நாம் வேதனையுடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இவை ஏன் ஏற்பட்டுள்ளன இவற்றை எவ்வாறு கடந்து செல்லலாம என்பது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் மிக ஆழமாக செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்யாமல் இன்றைய நிலையை கடந்து முன்னேற்றமடைவதென்பது சாத்தியப்படாது. அதேவேளை போராட்டத்தில் ஒழுங்கின்மை, ஸ்திரமின்மை என்பதனை வைத்துக்கொண்டு தமிழீழம் என்ற போராட்ட இலட்சியத்திற்கு மாறாக சில சக்திகள் செயற்படுவது ஆழ்ந்து அவதானிக்கப்பட வேண்டியதாகும். இவர்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழீழம் என்ற கோரிக்கை பிழையானது அது வெற்றியளிக்க முடியாது என்கின்ற எண்ணப்பாங்கினை வைக்கமுனைகின்றார்கள். தங்களின் வரண்ட கொள்கையினால் வரலாற்றில் எதனையும் சாதிக்க முடியாமல் வரலாற்றில் தோல்வி கண்ட சில பழைய இடதுசாரிகள் இத்தகைய போக்கில் முன்னணியில் நிற்கின்றார்கள். இத்தகைய பிழையான பழைய இடதுசாரிகளை குறை சொல்லும் அதேவேளையில் புதிய தலைமுறை உணர்வு பூர்வமான முறையில் சரியான மார்க்சிய கருத்துக்களை புரிந்து முன்னெடுக்க தவறியுள்ளதும் பழைய வரண்ட மார்க்சியவாதிகள் தலையெடுப்பதற்கு ஒரு காரணமாகும். எனவேதான் இங்கு இவ்விடயத்தை இருகோணத்தில் புரிந்து செயற்படவேண்டியது அவசியமாகும். ஒரு புறம பிழையான பாதையை கண்டிக்கும் வேளையில் சரியான பாதையை முன்வைப்பதாகும். பிழையான பாதையை கண்டித்தல் எனும் போது காரணகாரியங்களுடன் கண்டிக்கவேண்டும். வெறும் கண்டனங்களோ அல்லது தனிநபர் கண்டனங்களோ அர்த்தமற்றவை மட்டுமன்றி கேவலமானவையும் கூட. சரியான பாதை என்னும் போது அவற்றிற்கு சரியான விளக்கங்களை அளித்து விளக்கங்களின் அடிப்படையில் மக்களை ஒன்றிணைப்பதே ஆகும்.

ஒரு விடயத்தில் தவறுகள் என்பது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஏற்படுகின்றது. ஒன்று விசமத்தனமான தவறுகள், இரண்டு தமது தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் இழைக்கப்படும் தவறுகள், மூன்று தெரியாத்தனமான தவறுகள், நான்கு தவறென்று முதலில்தெரியாமலும் ஆனால் பின்பு தெரிந்தபோதிலும் தனது கருத்தை மாற்றிக்கொள்வது கௌரவமில்லை என்ற காரணத்தினால் ஏற்படும் தவறு ஐந்தாவது மற்றவர்களோடு கலந்து ஆலோசிக்காமல் தான் தோன்றித்தனமான முறையில் முடிவுகள் எடுப்பதனால் ஏற்படும் தவறுகள் சுயசெயலான தவறுகள் போன்ற பல்வேறு வகையில் நாம் வகைப்படுத்தலாம். இந்த வகையில் தமது போராட்டத்தில் ஏற்படும் தவறுகளை நாம் ஒவ்வொரு கணமும் ஆராய்ந்து அதற்கு ஒரு சரியான பரிகாரம் காணவேண்டும். தவறு ஏற்பட்டிருந்தாலும் தவறில் இருந்து நாம் சரியை நோக்கியே வளரவேண்டும். தவறில் இருந்து சரியை நோக்கி வளருதல் என்ற அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்து முன்னேற்றங்களை அடைய வேண்டும். இந்த வகையில் ஈழப் போராட்டத்தில் சில தவறுகள் உண்டு என்பதை ஒத்துக்கொண்டு அதன் திசையை திரும்பப் போதலாக மாற்றிவிடாமல் சரியான திசையில் கொண்டு செல்லல் அடிப்படையில் தமிழீழத்திற்கு எதிரான போக்குகள் முனைப்படைவதை எதிர்த்து கருத்து பூர்வமாக விளக்குவதாகவும் சில தத்துவக் குளறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படிகளுக்கு விளக்கமளிப்பதாகவும் இக் கட்டுரை அமைகின்றது.

எமது தமிழீழப் போராட்டமானது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையினை அடிப்படையாகக் கொண்டது. தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்துசெல்வதற்கான உரிமையினையும் தன்னகத்தே கொண்டது. ''தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதமும்-சில பிரச்சினைகள்'' என்ற நூலில் சுயநிர்ணய உரிமை பற்றிய தெளிவான விளக்கங்களை லெனின் முன் வைக்கிறார்.

''வரலாற்றுப் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் இருந்து பார்த்தால் மார்க்சியவாதிகளின் செயற்றிட்டத்தில் உள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதற்கு அரசியல் சுயநிர்ணயம், அரசின் சுயேச்சைத் தன்மை ஒரு தேசிய அரசு அமைத்தல் என்ற பொருள், தான் உண்டு. வேறுபொருள் இருக்கமுடியாது''(பக்கம்-79) ''தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்ற சொல்லைபுரிந்து கொள்ள நாம் விரும்பினால் அந்நிய தேச அமைப்புகளில் இருந்து இத் தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேசிய அரசு ஒன்றினை அமைத்தல் என்பதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் என்ற முடிவுக்குத்தான் நாம் வந்து சேருவோம்.'' (பக்கம்–74)

மேற்கண்ட மேற்கோள்களின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை எனும்போது அது பிரிந்து செல்லும் உரிமையினையும் உள்ளடக்கியதே என்பது தெளிவானது.

ஆனால் எமது தமிழீழப் போராட்டத்தினை அங்கீகரிக்காது ''மொத்தப் புரட்சி'' பேசும் வரட்டு மார்க்சியவாதிகள் இதனை ஏற்றுக்கொள்ளாதது விசமத்தனமானது. இவர்களுக்கு லெனின் மேற்கூறிய நூலிலேயே பதில் கூறுகிறார்.

''யாரொருவன் தேசிய இனங்கள், மொழிகளின் சம அந்தஸ்த்தை ஆதரித்து அதற்காகப் போராடவில்லையோ எல்லா தேசிய ஒடுக்கலையும் சமத்துவமின்மையும் எதிர்த்துப் போராடவில்லையோ அவன் ஒரு மார்க்சியவாதியே அல்ல; அவன் ஒரு ஜனநாயகவாதியே கூட அல்ல, அதில் சந்தேகமில்லை. (பக்கம்-33)

''உக்ரேனியர்களுக்கு முழுச் சமத்துவம் தரப்படவேண்டும். சுயேட்சையான தனியரசு ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உரிமை வேண்டும் என்ற கோரிக்கைகளை ஒரு கணமாவது பெரிய-ருசிய மார்க்சியவாதி மறந்துவிட்டால் பூர்ஷ்வா தேசியவாதமாகிய சக்தியில் மட்டுமன்றி கறுப்பு நூற்றுவர் வகை தேசிய வாதமாகிய சகதியிலும் சிக்கிக்கொள்வர். (பக்கம்-41)

எனவே இதன் அடிப்படையில் ஸ்ரீலங்காவில் இருந்து பிரிந்து தமிழீழம் என்ற தனியரசினை அமைப்பது என்ற போராட்ட இலட்சியத்தினையும் அதற்கான போராட்டத்தினையும் அங்கீகரிக்காதவர்கள் மார்க்சியவாதிகள் அல்ல. குறைந்த பட்சம் இவர்கள் ஜனநாயகவாதிகள் கூட அல்ல; எவன் ஒருவன் குறைந்த பட்சம் ஜனநாயக வாதியாகக் கூட இல்லாது இருக்கின்றானோ அவன் ஒரு பிற்போக்குவாதி, இந்த வகையில் எமது போராட்டத்தை அங்கீகரிக்காத அனைவரும் பிற்போக்குவாதிகளே. இவ்விடத்தில் காவோஸ்கி பற்றி லெனினின் கணிப்பீட்டினை நினைவு கூர்தல் பொருத்தமானதாகும். ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையினை ஏற்க மறுக்கின்ற காவோஸ்கி ஒன்றில் களிமண் மண்டையினை கொண்டவனாக இருத்தல் வேண்டும் அன்றேல் ஒரு விசமக்காரனாக இருத்தல் வேண்டும்'' என்று லெனின் குறிப்பிட்டார்.

இந்த வகையில் பிரிந்து செல்லும் உரிமையினை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் அதாவது தமிழீழக் கொள்கையை ஏற்க மறுப்பவர்கள் ஒன்றில் களிமண் மண்டைகள் அல்லது விசமக்காரர்கள் என்றே நாம் விளங்கவேண்டியுள்ளது.

இலங்கையின் தமிழ் - சிங்கள இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஒன்றே இவ்வித



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிபந்தனையுமில்லாமல் பிரிந்து செல்வதற்கான உரிமையினை அங்கீகரித்துள்ளது. நவசமசமாஜக் கட்சி பிரிந்து செல்லும் உரிமையினை அங்கீகரித்த போதிலும் அது நிபந்தனைகளுடனானதாகவே அமைந்தது. இவை தவிர்ந்த அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று ஒரு தனி அரசு அமைப்பது என்ற நிலையினை அங்கீகரிக்காதவையாகவே உள்ளன. ஆனால் வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் பிரிந்து செல்லும் உரிமையினை அங்கீகரிக்காத இக் கட்சிகளின் உள்ளே பிரிந்து செல்லும் உரிமையினை அங்கீகரிக்க வேண்டும் எனும் போக்கு தோற்றம் பெற்றது. வி. பொன்னம்பலம் கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ பிரிவு)யில் இருந்து வெளியேறி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையினை ஏற்று செந்தமிழர் ஆகிடுவோம் எனும் இயக்கத்தினை ஆரம்பித்தமையும் (இவ் இயக்கம் இடதுசாரி தலைமையினை கட்டி எழுப்பவில்லை என்பது கவனிக்கத்தக்கது) தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி தமிழீழக் கோரிக்கையினை ஏற்று தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (NLFT) ஆக பரிமாணம் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பலர் உதிரிகளாக பிரிந்து செல்லும் உரிமையினை அங்கீகரித்துள்ளார்கள்.

எனவே எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள தேக்க நிலையினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி போராட்டத்தினை தவறான திசையில் இழுத்துச் செல்ல முயலும் சக்திகள் குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். பிரிந்து செல்லும் உரிமையினை அங்கீகரிக்காது இங்கு அரசியல் நடத்துபவர்கள் எம்மைப் பொறுத்த வரையில் சந்தேகத்துக்குரியவர்கள். சுயமைத்தனம் மிக்கவர்கள். இன்னொரு வகையில் கூறின் இவர்கள் சோலைக்குள் உலாவும் பாம்புகள்.

இன்றைய இடதுசாரிகள் பலர் S L F.P அரசினை முற்போக்கானது என்று கூறுகின்றார்கள். இவர்களின் கோஷங்கள் சிங்கள இனவாத அரசுகளுக்கு எதிரானதாக அமையாமல் U.N.P அரசிற்கு எதிரானதாக மட்டுமே வைக்கப்படுகின்றன. இவர்கள் பண்டாரநாயக்காவையும் அவரது SLFP அரசினையும் முற்போக்கானவை என்று கூறுவதற்கு முக்கியமாக மூன்று விடயங்களை முன்வைக்கின்றனர்.

(1) நெற் காணிக் கொள்கை

(2) அந்நிய தளங்களின் அகற்றம்

(3) தேசிய மயமாக்கம்

எந்த ஒரு திட்டமும் ஏற்படுத்துகின்ற மொத்த விளைவுகளைக் கொண்டுதான் அது முற்போக்கானதா அல்லது பிற்போக்கானதா என்ற மதிப்பிடப்பட முடியுமே தவிர அது அறிமுகப்படுத்தப்படும் வடிவத்தினை கொண்டு அல்ல. இந்தவகையில் SLFP அரசின் நெற் காணிக் கொள்கையானது சமரச வாதத்தின் வெளிப்பாடாகவே அமைந்தது. முரண்பாடுகள் முற்றி புரட்சி வெடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி வந்த காலகட்டத்தில் SLFP அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட நெற்காணிச் சட்டமானது முரண்பாடுகளுடன் சமரசம் செய்து கொள்ளும் நிலையினையே ஏற்படுத்தியது. இந்த வகையில் புரட்சிக்கான சூழ்நிலையை உருவாகவிடாத வகையில் சமரச வாதப் போக்கினை நிலைநிறுத்திய நெற் காணிக் கொள்கையானது வெறும் சீர்திருத்தவாதமேயாகும்.

SLFP அரசின் தேசியமயமாக்கல் எனும் திட்டமானது உண்மையில் தேசிய மயமாக்கலாக அமையாது சிங்கள மயமாக்கலாகவே அமைந்தது. சிங்களவர்களுக்கு வேலை வசதி அளித்தல் என்பது இத் தேசிய மயமாக்கலின் அடிப்படை நோக்கங்களின் ஒன்றாக அமைந்தது. எனவே இத் தேசிய மயமாக்கல் என்ற வடிவில் மேற் கொள்ளப்பட்ட சிங்கள மயமாக்கல் என்பது இனவாதத்தின் வெளிப்பாடாகவே அமைந்தது. இவ்விடத்தில் 1956 இல் பண்டாரநாயக்காவினால் வெளிப்படுத்தப்பட்ட இனவாதத்தின் குழந்தை, தான் ரோகண விஜேவீர என்ற மேர்வின்-டி சில்வாவின் வர்ணனையினைக் குறிப்பிடுதல் பொருத்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் பழைய பழுத்த இடது சாரியான பிலிப்குணவர்த்தன 1956 இல் பதவியேற்ற மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து பின்னர் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது. பண்டாரநாயக்கா ஒரு இனவாதியாகவும் ஜனநாயக விரோதியாகவும் செயற்பட்டமை எவராலும் மறுக்கப்படவோ அல்லது மறைக்கப்படவோ முடியாது. பண்டார நாயக்காவின் அந்நிய தளங்களை அகற்றும் திட்டம் முற்போக்கானதாக இருந்தாலும் ஒட்டு மொத்தமாக பண்டார நாயக்காவின் திட்டங்கள் ஏற்படுத்திய விளைவினையும் இனவாதியாகவும் ஜனநாயக விரோதியாகவும் அவர் செயற்பட்டமையினையும் ஒப்பு நோக்கும் போது பண்டார நாயக்கா பிற்போக்கானவரே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எனவே பண்டாரநாயக்காவினை முற்போக்காளர் என துதிபாடுபவர்களின் பின்னணி சந்தேகத்திற்குரியதே. பண்டார நாயக்காவின் கொள்கையினை வழிபட்டு பின்பற்றுபவரே சிறீமாவோ அம்மையார். சிறீமாவோ அம்மையாருடன் கூட்டரசாங்கம் அமைத்த லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இனவாதத்தினை அடிப்படையாகக் கொண்டே கூட்டரசாங்கத்தில் கை கோர்த்துக் கொண்டன. இங்கு 1944-இல் இனவாதத்திற்குள் உள்ளாகாத நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்து பகிரங்கமாக அதனை முன் வைத்தமையினைக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். (Documents of the Ceylon National Congress and National Politics in Ceylon 1929 - 1950 Vol III)

Pages-2577-2591

ஆனால் இனவாதத்தை இணைத்துக்கொண்டபின்னர் இடதுசாரிகளும் பிற்போக்காளர்களாக மாறிவிட்டனர். 1972-இல் கூட்டாட்சிக் காலத்திலேயே பௌத்த மதம் ஏறக்குறைய அரச மதமாகவும் அதனைப் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமை எனவும் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பௌத்தத்தினை வெறுத்த N. M. பெரேரா, கொல்வின் போன்ற இடதுசாரித் தலைவர்கள் கூட்டரசாங்கத்தில் பதவியேற்ற பின்னர் கண்டி தலதா மாளிகையில் பிரார்த்தனைக்குச் சென்றமை கவனிக்கத்தக்கது. கூட்டரசாங்கக் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சகல ஒடுக்குமுறைகளுக்கும் இவர்கள் துணை போனவர்களாக அமைந்தனர். தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதில் பெரும் பங்கு வகித்த 1972ம் ஆண்டு அரசியல் சட்டத்தினை வகுத்தவர்களில் முதன்மையானவர் கொல்வின் ஆர்டி சில்வா என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய அகராதியில் முற்போக்கு என்பதன் அர்த்தம் பிற்போக்கு என்பதே. அடிப்படையிலும் அடிப்படையாக இவ் இடது சாரித் தலைவர்கள் சிறிமாவோயிஸ்டுகளாகவே இருந்தனர்.

எனவே இவர்களின் தலைமையினைப் பிரதிநிதிப் படுத்துபவர்களாக இங்கிருப்பவர்கள் குறித்து நம் எச்சரிக்கையாக இருத்தல் அவசியமானது. தமிழீழப் பிரதேசங்களில் இவர்களுடைய செயற்பாடு தமிழீழம் என்கின்ற இலட்சியத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துவதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்று வெகுசன அமைப்புக்களில் சில, வெகுசன அமைப்புக்கள் அரசியல் கருத்துக்களை முன்வைத்தல் வெகுசன அமைப்புக்களில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாமென அஞ்சுவதனால் அரசியல் கருத்தினை பகிரங்கமாகவைக்காமல் ஆயங்க முற்படுவதாக அறியவந்துள்ளது. ஒரு சிலர் வெகுசன அமைப்புக்களுக்கு அரசியல் கருத்து இருக்கத் தேவையில்லை என்ற கருத்தினையும் கொண்டவர்களாக உள்ளனர். இப் போக்குகள் தவறானவையே. வெகுசன அமைப்புக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட பிரச்சினைகளின் காரணமாக உருவாக்கப்பட்டாலும் அவை அப் பிரச்சினைகளுடன் தனித்து நிற்கமுடியாதவை ஆகும். பிரச்சினைகளை எவ்வழிகளில் தீர்க்கமுடியும் எனும் கருத்தோட்டம் எழும்போது அது தொடர்பான அரசியல் கருத்தினையும் முன்வைக்கவேண்டிய அவசியம் வெகுசன அமைப்புகளுக்கு ஏற்படுகின்றது. வெகுசன அமைப்புக்கள் அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்மானங்களை நிறைவேற்றியமை வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. ருஷ்யாவில், சோவியத்துக்களுக்கே சகல அதிகாரமும் என்ற நிலையினை லெனின் முன்வைத்த போது பல வெகுசன அமைப்புக்கள் இதனை ஏற்று தீர்மானங்களை நிறைவேற்றின. 1944-இல் அகில இலங்கை தொழிலாளர் சம்மேளனம் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்து தீர்மானங்களை நிறைவேற்றியது 1956-இல் சிங்களம் மட்டும் எனும் கருத்து முதன்மை பெற்றெழுந்த போது அநேகமான சிங்கள வெகுசன அமைப்புக்கள் சிங்களம் மட்டும் என்பதனை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றின. இத் தீர்மானம் எம்மைப் பொறுத்தவரை தவறானதாக இருந்தாலும் வெகுசன அமைப்புக்கள் அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன என்பதை வலியுறுத்தவே இதனைக் குறிப்பிடுகின்றோம். இலங்கை ஆசிரியர் சங்கம் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளமையினையும் இங்கு குறிப்பிடல் பொருந்தும். இவை மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்களும் அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்ள அதிகாரம் உடையவையே.

எனவே வரலாற்றில் வெகுஜன அமைப்புக்களும் தொழிற்சங்கங்களும் அரசியல் தீர்மானங்களை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளன. எனவே இங்கு தமிழீழப் பகுதியில் செயற்படும் வெகுசன அமைப்புக்கள் தங்களது அரசியல் தீர்மானத்தினை பகிரங்கமாக மக்கள் முன் வைத்தல் அத்தியாவசியமானதாகும். இக் கட்டுரையில் நாம் வலியுறுத்திய கருத்துக்களின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையினை ஏற்று தமிழீழம் எனும் தனி அரசினை உருவாக்குவது எனும் போராட்ட இலட்சியத்தினையும் அதற்கான போராட்டத்தினையும் அங்கீகரித்து அதனை பகிரங்கமாக மக்கள் முன்னிலையில் வைப்பது வெகுசன அமைப்புக்களைப் பொறுத்தவரை சில சந்தேகங்களைத் தவிர்ப்பதற்கான அவசிய நடவடிக்கையாகும். தமிழீழம் என்ற இலக்கில் இருந்து விலகிப் போய் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் தமிழீழம் எனும் கோரிக்கை புரட்சிகரமானது என்பதையும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள போராளிகள் உணர்ந்து செயற்படவேண்டும். மக்களின் மத்தியில் ஆயுதம் தாங்கிய ஸ்தாபனங்களில் ஒன்று தமிழீழப் போராட்டத்தில் இருந்து விலகி இலங்கை முழுவதற்குமான புரட்சியில் நம்பிக்கைவைத்துள்ளது. அவ்வாறான சிந்தனைப் போக்கு தவறானது என்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ❋

---

6-04-1986 அன்று கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி நகரை நோக்கி முன்னேறிய போது போராளிகளால் எதிர் கொள்ளப் பட்டு மீண்டும் முகாமுக்குத் துரத்தியடிக்கப்பட்டனர். முகாமுக்குள்ளிருந்து இராணுவத்தால் மோட்டார் தாக்குதல் மேற் கொள்ளப்பட்ட போது போராளிகளினாலும் பதில் தாக்குதல் நடாத்தப்பட்டது இச்சம்பவத்தின் போதும் இதற்கு முன்னர் இடம் பெற்ற இத்தகைய சம்பவங்களின் போதும் பொது மக்கள் தற்காப்பு முறைபற்றிய எவ்வித அக்கறையுமின்றி கூட்டம் கூட்டமாக வேடிக்கை பார்க்க நகருக்குள்குழுமியிருந்தனர். இத்தகைய நடவடிக்கைகளால் அநியாயமான உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன் போராளிகளின் எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் சிலசமயங்களில் இடையூறுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு எதிர்த்தாக்குதல்கள் நடாத்தப்படும் போது 'பொம்பர்' விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. எனவே பொதுமக்களை, வேடிக்கை பார்ப்பதற்காக கூடுவதனைத் தவிர்க்குமாறும், குண்டு தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியிடப் பட்டுள்ள 'குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு' எனும் நூலில் வழங்கப் பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வோமா?

நேதாஜி

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பத்தில் வங்கிக் கொள்ளைகளை மேற்கொண்டு விடுதலைப் போருக்கு நிதி திரட்டிக் கொள்வதில் ஆரம்பித்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ளும் போது காட்டிக் கொடுத்த துரோகிகளுக்கு தண்டனை வழங்கியதோடு அவை தொடர்பாக விசாரணை செய்ய முனைந்த பொலிசார் மீது இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வளரத் தொடங்கியது. பின்னர் பொலிஸ் ஜீப்மீது தாக்குதல், பாதுகாப்புப் படை மீது தாக்குதல், பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல், இராணுவ ஜீப் மீது கண்ணி வெடித்தாக்குதல், இராணுவ தொடர் வண்டிகள் மீதுதாக்குதல், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் என தரை மார்க்கமான போராட்டம் வளர்ச்சி பெற்று இன்று வானத்தில் பறக்கும் வானூர்திகள் மீதும் கடலில் ரோந்து செல்லும் கடற்படை படகுகள் மீது கடல் கண்ணி வெடித் தாக்குதல் என பலபட விரிந்து வளர்ச்சி பெற்றுக் கொண்டு செல்கிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பொறுத்த வரை முப்படைகளையும் தமது முகாம்களுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கக் கூடியதாகவும் வெளியே தலை காட்டாதவாறும் போராளிகள் தமது படைப்பலத்தைப் பெற்றுள்ளார்கள்.

இந்தநிலையில் அடுத்தகட்டமாக எமது போராளிகள் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் எமது போராட்ட வரலாற்றில் மற்றுமொரு வளர்ச்சிக் கட்டத்தை தாண்டலாம் என்றே கருதப்படுகின்றது. எமது போராட்டம்மேலும் மேலும் முனைப்படைந்து இறுதிக்கட்டத்தை அடையும் போது எமது தாயகத்தை உலகவரை படத்தில் பதிந்து கொள்ள சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் எமக்குத் தேவை. அவ்வாறான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள புதிதாக தோன்றும் நாடுகள் எத்தகைய வழிவகைகளை மேற்கொள்கின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஏன் தேவை?

புதிதாக உதயமாகும் ஒரு நாட்டிற்கு உலக நாடுகளின் அங்கீகாரம் தேவையா? என்ற கேள்விக்கு யாரும் எதிர்மறையான பதிலைக் கொடுக்க மாட்டார்கள். ஒரு நாடு ஜனநாயக நாடாகவோ சர்வாதிகார நாடாகவோ அல்லது சமதர்ம பொருளாதார முறைகளையுடைய நாடாகவோ பரிணமிக்கும் போது அந்தநாடு உலக நபரத்துவத்தைப் (International Personality) பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அத்தகைய உலக நபரத்துவம் இல்லாவிடின் அது சர்வதேச நாடுகளின் கூட்டுக் குழும் பங்களிலோ அல்லது சர்வதேச அமைப்புகளிலோ அங்கத்துவம் பெற்றுக் கொள்ள முடியாது. இத்தகைய சர்வதேச ரீதியிலான அமைப்புகளில் அங்கத்துவம் பெறாது எந்தவொரு நாடும் தனித்து நின்று செயல்பட முடியாது. இன்று உலக நாடுகளிடையே பொருளாதார ரீதியான உதவிகளுக்கும் இராணுவ ரீதியான உதவிகளுக்கும் ஒன்றில் ஒன்று பெருமளவில் தங்கி நிற்கும் நிலையே காணப்படுகிறது. இந்த நிலையில் புதிதாக உதயமாகும் நாடுகள் தமது எதிர்கால நலன் குறித்து இவ்வாறான சர்வதேச நாடுகளின் அமைப்புகளில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையாவது அங்கத்துவம் பெறாது தனித்து நின்று வளர்ச்சி பெறுவது கடினமானதாகும்.

## எமது நிலை என்ன?

எமது தமிழீழவிடுதலைப் போராட்டமானது இப்போது முனைப்பு அடைந்திருந்தாலும் கூட நாம் இன்னும் பல வளர்ச்சிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டங்களைத் தாண்ட வேண்டியுள்ளது. இவ்வாறாக பல வளர்ச்சிக் கட்டங்களை தாண்டும் போது நாம் பல புதிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரலாம்.

அண்மைக் காலத்தில் எமது தாயகத்தில் பல பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. தாவடி, சுதுமலை, சுருவில், வல்வெட்டித்துறை, முழங்காவில், பரப்பாங்கண்டல், திரியாய் முதலான பல பகுதிகளில் இவ்வாறான தாக்குதல்களால் பல வீடுகள் சேதமுற்றுள்ளதோடு பயிர்கள், கால்நடைகள் மட்டுமன்றி பல மனித உயிர்களும் அழிக்கப்பட்டு உள்ளன. எதிர்காலத்திலும் இத்தகைய தாக்குதல்கள் மேலும் மோசமடையலாம். பல கட்டிடங்கள் சேதப்படலாம். எமது வயல்கள் பயிர் செய் நிலங்கள், உப உணவு பயிர்கள் குண்டு வீசப்பட்டு எரிக்சப்படலாம். ஏற்கனவே உடும்பன் குளத்தில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்டதோடு நெற்கதிர்களும் எரிக்கப்பட்டுள்ளன. பரந்தனில் நெல் விவசாயிகளது பல நூற்றுக்கணக்கான நெல் மூட்டைகள் இராணுவத்தால் அண்மையில் ஆனையிறவு முகாமுக்கு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. முரசுமோட்டை, வட்டக்கச்சி போன்ற இடங்களில் பல விவசாயிகள் மிக அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு புதுப்புது சட்டங்களைப் போட்டு (மீன்பிடி தடைச் சட்டம்) உணவு பொருட்களை மக்களுக்கு கிடைக்காமற் செய்து பட்டினி போட்டு ஒடுக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குண்டு வீச்சுக்களை தொடர்ந்து புதுப்புது தொற்று நோய்கள் பரவலாம். அண்மையில் தாவடி பகுதியில் புதுவித காய்ச்சல் நோய் பரவியது. எமது கறவைகள், கால்நடைகள், வளர்ப்புப் பறவைகள் அழிக்கப்படலாம்.

இவ்வாறான நிலைமைகளில் எமது போராட்டத்தின் பின் மீண்டும் நாம் எமது தாயகத்தை புனரமைக்க வேண்டுமாயின் உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவு ஸ்தாபனம், யுனெஸ்கோ போன்ற அமைப்புகளிலிருந்து உதவியும் ஆலோசனையும் தேவைப்படலாம். சர்வதேச ரீதிலாயியான அங்கீகாரத்தை நாம் பெற்றுக்கொளளும் பட்சத்திலேயே நாம் சர்வதேச ரீதியான ஸ்தாபனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்கு நாம் சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## எவ்வேளைகளில் இவ்வாறான அங்கீகாரத்தைப் பெறலாம்

விடுதலை கோரிப் போராடும் நாட்டைப் "புரட்சி நாடு" என்றும் எந்த நாட்டிற்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படுகின்றதோ அந்த நாட்டை "தாய் நாடு' என்றும் சர்வதேசிய சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றது. விடுதலைப் போராளிகள் குறிப்பிட்ட ஒரு நிலப் பகுதியில் தமது அரசு ஒன்றை அமைத்து அதனை ஒரு நிகழ்வு நிலை (De Facto Government) அரசாகவோ அல்லது ஒரு கரந்துறை அரசாகவோ (Govt in Exile) அழைக்கலாம். அவ்வாறான ஒரு அரசை அமைத்து விடுதலைப் போராளிகள் போரினைத் தொடர்ந்து நடத்தினால் அவ்வாறான போராளிகள் கூட்டத்தாரை போராடும் ஒரு அரசாக (Belligerent State) அங்கீகரிக்கும் வழக்கம் சர்வதேச மரபாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான மரபுகளின் படி போராட்டத்தின் எந்த வேளையில் புரட்சிப் படையினரை அங்கீகரிப்பது என்பது தான் கேள்வி?

உரிய காலத்திற்கு முன்னரேயே அதாவது விடுதலைப் போராட்டம் முனைப்படைந்து வெற்றி வாய்ப்பை புரட்சிப் படைகள் எட்டு முன்னரோ அல்லது விடுதலைப் போராளிகள் தமது நிலப்பிரதேசத்தை முழுமையாகத் தமது தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமுன்னரோ அல்லது தொடர்ந்து அவ்வாறான கட்டுப்பாட்டிற்குள் கைப்பற்றப்பட்ட தமது நிலப்பகுதியை வைத்திருக்கக்கூடிய பலம் பொருந்தியவர்களாகவோ இல்லாத நிலையில் அவர்களை மற்ற நாடுகள் அங்கீகரித்தால் அது உள்நாட்டின் விவகாரங்களில் தலையிட்டதாகக் கருதப்படுகிறது. அது சட்டமுறையற்ற செயலாகவும் ஆக்கிரமிப்பாகவும் கூட கருதப்படலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(7ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐக்கிய முன்னணி

எனவே வரி விதிப்பு என்பது முதலாளிகள் பெறும் இலாபத்திலிருந்து அறவிடுவது என்று வருகிற போது மட்டுமே அது புரட்சிகர வரி விதிப்பாக அமையும். வெறுமனே பண்டத்தின் விலையில் செய்யப்படும் விலை அதிகரிப்பின் மூலம் பெறப்படும் வரி எனில் அது முதலாளித்துவ அரசுகள் பண்டங்களின் விலையை உயர்த்துவதற்குச் சமனான நடவடிக்கையாகவே கருதப்பட இடமுண்டு. சிகரட், சாராயம், மற்றும் கேளிக்கை, ஆடம்பரப் பொருள்களின் மீதான வரி அது புரட்சிகர வரி விதிப்பாக அமைகிறதோ இல்லையோ இன்றைய சூழலில் அதனை ஏற்றுக்கொள்ளும் தார்மீக மனநிலை பொது மக்களிடம் காணப்படுகிறது என்று கருத இடமுண்டு. இவற்றைப் பாவிக்காதவர்களின் தளத்திலிருந்து இது நியாயபூர்வமாகவும் கருதப்படும்.

எனினும் மருந்து வகைகள் போன்றவை மிக அத்தியாவசியமானவை என்ற வகையில் அவற்றின் மீதான வரி விதிப்பு குறித்துப் புரட்சிகரமான கண்ணோட்டம் செலுத்தப்படவேண்டும்.

சிறீலங்காவின் உற்பத்திகளைப் பொறுத்தவரை சவர்க்காரம், சோடா போன்றவற்றின் மீது வரி விதிப்புச் செய்வதிலும் அவற்றை முற்றாகத் தடை செய்துவிட்டு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதே உண்மையில் செய்யப்பட வேண்டியது ஆகும்.

இத்தகைய புரட்சிகர வரி விதிப்பும் கூட, பல விடுதலை இயக்கங்கள் தொழிற்படுகிற சூழலில், மையப்படுத்தப்பட்ட நிதி அமைப்பு ஒன்று இல்லாத போது இயக்கங்களின் ஐக்கிய முன்னணியை வலியுறுத்துகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

நமது போராட்டத்தின் வெற்றியை நோக்கிய நிலைமைகள் சர்வதேசிய, பிராந்திய ரீதியில் கனிந்து வருகிறபோது நாம் நமது கடமைகளைப் பிழையறப் புரிவதிலே மிக அதிகளவு கவனம் செலுத்துவோம்! ☆

இதனைத்தவிர விடுதலைப் போராளிகள் தம்மை அடக்கி ஒடுக்கும் நாட்டைப் போரில் வென்றுவிட்டாலோ அல்லது தாய் நாடு புரட்சி நாட்டை ஒடுக்கும் முயற்சிகளைக் கைவிட்டு விட்டாலோ அல்லது தாய் நாடு அப்புரட்சி நாட்டை தன் கைவசத்திற்கு மீண்டும் கொண்டுவரும் சக்தியை இழந்து விட்டாலோ சர்வதேச நாடுகள் அப்புரட்சி நாட்டை அங்கீகரிக்கலாம்.

## எமது தாயகத்தின் நிலை

தமிழ்ஈழப் பிரதேசத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் குடா நாடு தற்போது பெருமளவில் விடுதலைப் போராளிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் பகல் வேளைகளில் பல கவசவாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து செல்ல ரோந்து சுற்றி வந்த இராணுவம் இப்போது வெளியே வர முடியாத நிலையில் அல்லது வெளியே தலைகாட்டினால் போராளிகளின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறது. இது அண்மைக்காலத்தில் எமது போராட்டப் பாதையில் ஏற்பட்ட ஒருபடி நிலை வளர்ச்சியாகும். ஆனாலும் கூட இன்னும் குடாநாட்டிற்குள் சில முகாம்கள் இருப்பதும் இலவங்குவானூர்திகள் தாக்குதல் மேற்கொள்வதும் ரோந்து செல்வதும் எமதுபூரணமான கட்டுப்பாட்டிற்குள் குடா நாடு வரவில்லை என்றே பொருளாகும் இதற்குநாம் இன்னும் பலபடிகளைத் தாண்ட வேண்டும். அத்தோடு வடக்கு கிழக்கு மாகாணம் உள்ளிட்ட எமது ஈழப் பிரதேசம் முழுவதையும் போராளிகள் தமது பரிபூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதோடு மீண்டும் எமது மண்ணை சிறிலங்காஇராணுவம் ஆக்கிரமிப்புச் செய்யாத வகையில் தனது முழுப்பலத்தையும் தமிழ் ஈழப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவம் இழந்து விட்டமையையும் உலகிற்கு உணர்த்த வேண்டும். இதுவே சிறிலங்கா அரசை தனது விடுதலைப்

(17-ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதை

# ஒரு கறுப்பனின் கடிதம்

செழியன்

வெள்ளை
கறுப்பு
என்ற முக்கிய விடயத்தைத் தவிர
முகங்களை
இது வரையுமே அறிந்திராத
என் அமெரிக்க
வெள்ளை நண்பனுக்கு!

உனது
பாட்டனும்
தந்தையும்
உனக்குச் சொல்லியது படியே
கறுப்பின் மீது / உனக்குள்ள
வெறுப்பை நாங்கள் அறிவோம்.

எனது கடிதத்தைப் பார்க்கையில்
உனது கோதுமைப் பண்ணைகளில்
வேலை செய்யும்
கறுப்பு அடிமைகள்
உனக்கு நினைவில் வருவதொன்றும்
ஆச்சயரிமான விடயமில்லை.

உனக்குத் தெரியுமா?
உனது பண்ணைகளில்
வேலை செய்பவர்களுக்கும்
நிலங்களிலே உழைக்கின்ற
எங்களுக்கும் இடையில்
தேசங்களை விடவும்
அதிகமாக வித்தியாசங்கள்
எதுவுமே இல்லை.

சரி
இது ஒரு புறம் இருக்கட்டும்.

எங்களைப் பற்றி
நீயும்
சில விடயங்களை அறிந்து வைத்திருப்பாய்.

உனது பாட்டனும்
தந்தையும்
லங்கா புவத்தும் கூறுவது படியே
எங்களைத் தெரிந்திருப்பாய்

இவற்றை விட
உனக்குத் தெரிவதெல்லாம்
எங்கள் தேயிலையின் சுவை

அதில் கூடப் பார்
அதன் பின்னே உள்ள
சோகமான வரலாறு
உனக்குத் தெரிந்திருக்க
நியாயம் எதுவுமில்லை.

உன் தந்தையின்
வாலிப வாழ்க்கை
உன்னிடம் மறைக்கப்பட்டது போலவே
உன் தந்தைமார் புதைத்த
புதை குழிகளில்
இந்த வரலாறுகளும் போயின!

போகட்டும்!

வாட்டகேட் ஊழலால்
ஜனாதிபதி நிக்சனை பதவி இறக்கிய
உங்கள் ஜனநாயகப் பெருமை
நீ மட்டுமல்ல
உன் தேசமே அடிக்கடி
பீற்றிக் கொள்ளுமே!

நண்ப!
நாங்களும்
எங்கள் நிலத்தில்
கடிதங்களை எழுதவும்
கவிதைகளை பாடவும்
எங்கள் வயல்களில்
நாங்கள் விதைப்பதற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயல்களின் வரம்புகளில் நின்று
எங்கள் குழந்தைகள் சிரிக்கவும்
தொலைத்து விட்ட
ஜனநாயகங்களைத் தேடுகின்றோம்.

எங்கள் தேடலில்
இதுவரை
நாங்கள் சந்தித்ததிலில்
உங்கள் தேசத்து ஆயுதங்களும்.........

நண்ப!
ஒன்றை மட்டும் கூறுகிறேன்.

மறுபடியும்
நீ
உன் பாட்டன் மாரும்
தந்தைமாரும்
லங்காபுவத்தும் சொல்லியதையே
கூறுவாயாயின்
உண்மைகளை நீ தேடுவதோ
உன்னுடன்
நான் பேசுவதோ முடியாது

உண்மைகளை
நீ தேடுவதற்கு முன்
கறுப்பைப் பற்றி
உன் தந்தைமார்
பாட்டன்மார் சொல்லியதை
ஒரு முறை.
மீளப் பார்த்தாக வேண்டும்.

எப்போதாவது
நீ புரிந்து கொண்டு
யாராவது கூறக் கேட்டு
நீ அறிந்து கொண்டு
என்னைத் தேடிப்பார்க்க முயன்றுயாயின்,

எங்கள்
தேசத்து மக்களிடம் வந்து
கேட்டுப்பார்.

மக்கள்
வழிகாட்டுவார்கள்

எரிகின்ற வயல்களில்
அறுவடை நடாத்தும்
எல்லையோரத்து வயற்காடுகளில்

நீ
பேசுவதற்காக
என் நண்பர்கள்
உன்னை பார்த்திருப்பார்கள் ❋

## சர்வதேச நாடுகளின் . . .

(15-ம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டத்தில் தமிழ்ப் போராளிகள்முற்றாகத் தோற்கடித்துவிட்டார்கள் என்பதையும் அவர்கள் சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டியவர்கள் என்ற நிலைப்பாட்டை உருவாக்கலும் சர்வதேச மரபுகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும்.

### அங்கீகாரத்தை எப்படிப் பெறலாம் ?

புதிதாக தோன்றும் ஒருநாட்டிற்கு மற்ற நாடுகளின் அங்கீகாரம் இரண்டு வகையாக வழங்கப் படலாம். ஒன்று மறைமுக அங்கீகாரம் மற்றது நேரடியான அங்கீகாரம். நேரடியாகவே வெளிப்படையாகவே வாழ்த்துச் செய்திகளையும் அனுப்பி தனது அங்கீகாரத்தை தெரிவிக்கலாம். உதாரணமாக, பங்களாதேசிற்கு இந்தியா இத்தகைய முறையைக் கையாண்டது. தூதுவராலயங்களை ஸ்தாபித்து தூதியல் முறைகளை கையாண்டு இராஜதந்திர ரீதியான அங்கீகாரத்தை வழங்கலாம். பொருளாதார ரீதியான உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு அங்கீகாரத்தை வழங்கலாம். இவை மறை முக அங்கீகாரம் எனப்படும். பாலஸ்தீனப் போராட்டத்தை உலகநாடுகள் சில இத்தகைய முறையைக் கையாண்டு அங்கீகரித்துள்ளன.

எமது போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் செயல் திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டிய அவசியம் உள்ளது. விடுதலை ஸ்தாபனங்கள் இதனை உணர்ந்து செயற் படுவார்கள் என நம்புகிறோம். ❋



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவகாலனித்துவம் - 5

''பல்தேசிய நிறுவனங்கள் தேசிய வளங்களை வெளியே கொண்டு செல்வதனுல் ஏற்படும் விரயம் பெரிது....... தேசிய அரசுகளின் நிலைபேற்றிற்கு இவை ஒரு நேரடி ஆபத்து ......அரசுகளை கவிழ்ப்பதற்கும் கெடுப்பதற்கும் இவற்ருல் இயலும். புரட்சிகளை (!) இவற்ருல் தூண்ட முடியும் போர்களை உருவாக்கி ஜனநாயகத்தின் அழிவுக்கே இவை வழிகோல முடியும்'' இவ்விதம் ஹெஹரஸ் எழுதினர்.

வால் ஸ்டீரிற் ஜேர்ணலின் (Wall Street Journal) ஐரோப்பிய அலுவலகத்தின் மதிப்பீட்டின் படி 1950—1972 காலப்பகுதியில் மூன்ரும் உலகின் அமெரிக்க நிறுவனங்களின் வெளி முதலீடு 50 பில்லியன் அமெரிக்க டொலர்களேயாகும். இதே வேளை 99 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீட்டு வருமானமாக இவை பெற்றன.

''அங்ராட்'' (UNCTAD) புள்ளி விபரங்களின் படி 1950–1960 காலத்தின் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் லத்தீன் அமெரிக்காவில் முதலிடப்பட்டது. இம் முதலீட்டின் லபம், வட்டி, பங்கு லாபம் என்ற வகையில் 11.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கக் கம்பனிகள் பெற்றுச் சென்றன. 7.5 பில்லியன் டொலர்களை லத்தீன் அமெரிக்கா இழந்தது சர்வதேச ஆய்வுநிறுவனங்களின் மதிப்பீட்டின்படி மூன்ரும் உலகிற்குள்புகும் முதலீட்டிற்கும் அங்கிருந்து வெளியேறும் வருவாய்க்கும் இடையில் மூன்று மடங்கு வித்தியாசம் உள்ளது.

சார்பு நாடுகளின் கொள்கை திட்டமிடுவோர் எவ்விதம் கூறியபோதும், இந் நாடுகளின் உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதில் வெளிநாட்டு முதலீடு உண்மையான பங்களிப்பை செய்யவில்லை. ஏனெனில் இந் நாடுகளின் விருத்தித் தேவைகளுக்கு இசைந்ததாக அவை இல்லை. உதாரணமாக உள்நாட்டு உணவுத் தேவைக்கான உற்பத்தி, ஏற்றுமதி உற்பத்தி காரணமாகப் புறக்கணிக்கப்படும். மிகக் கூடிய இலாபத்தையும், வெளிநாட்டுச் சந்தையின் தேவைகளையும் குறியாகக் கொண்டே இம் முதலீடுகள் அமைவதே காரணமாகும். உள்ளூர் மூலதனத்திற்கு உற்பத்தித்துறையின் ஒரு பகுதியை பல்தேசிய நிறுவனங்கள் ஒதுக்குவது உண்மை தான். இடைத்தரத் துறைகளான, விநியோகம், வங்கித் தொழில், இன்சூரன்ஸ், உதிரிப்பாகங்களின் விநியோகம், உற்பத்தி முடிவுப்பணிகள் (Finishing) என்ற துறைகளில் உள்ளூர் மூலதனம் ஊக்குவிக்கப்படும். எனினும் நாட்டின் பொருளியலில் இவற்றின் விளைவுகள் அற்பமானவை. தொழில் நுட்ப நிர்வாக பணியாளர் பெருமளவில் வெளியில் இருந்து கொண்டு வரப்படுவர். தொழில் நுட்ப ஒப்பந்தங்கள் உள்நாட்டு ஆராய்ச்சிக்குத் தடைவிதிக்கின்றன. உள்நாட்டு முதலாளி வகுப்பின் ஆட்சி அதிகாரமும் பொருளியல் கொள்கையும், உலக முதலாளித்துவ வேலைப் பகுப்பில் அதி விசேடமான தனித்துறைகளில் சிறப்புத் தேர்ச்சியை உண்டாக்கும். இதனுல் சார்பு நாட்டின் பொருளியல் பலவீனமான நிலையில் இருக்கும். கூலியின் சிறிய உயர்வு கூட மூலதனத்தின் இடப் பெயர்ச்சியைத் தூண்டலாம். உலகின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்குத் தொழிற்சாலைகளை மாற்றிவிடக்கூடிய சக்தி பல்தேசிய நிறுவனங்களுக்கு உண்டு.

பல்தேசிய நிறுவனங்கள் வேலை வாய்ப்பை பெருக்கும் என்பதும் உண்மையில்லை. ஏனெனில் இவற்றின் உற்பத்தி முறைகள் மூலதனச் செறிவுள்ளனவாதலால் தொழில் வாய்ப்புகள் குறைவு. பெரும்பாலும் பயிற்றப்படாத உடல் உழைப்பாளருக்கான தேவைதான் கூட இருக்கும். வேலைகளின் தன்மை பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் தேவையைக் குறைக்கின்றது. பொறியிலாளர்கள், நிர்வாகிகள் போன்ற உயர் தொழில் வகுப்பினர் கூட விரக்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படையும் நிலை தோன்றும். காரணம் வெளி நாட்டு நிபுணர்களே முக்கிய இடங்களைப் பிடித்துக் கொள்வர். சம்பளத்திலும் உள் நாட்டவர்க்கு பெரிய வித்தியாசம் இருக்கும். வரி, அந்நியச் செலவாணி கட்டுப் பாட்டு விலக்குகள், வீட்டு வசதிகள் போன்றன வெளிநாட்டவர்களுக்குக் கொடுக்கப்படுவதால் அவர்கள் வசதியான வாழ்க்கை நடத்துதல் முடியும். இதே சமயம் உற்பத்தியில்லாத சேவைத்துறை ஒன்று உருவாக்கப்பட்டுப் பெருப்பிக்கப்படும். (A Vast non Productive Service Sector) மதுச் சாலைகளில் பணிபுரியும் பெண்கள், சப்பாத்தைத் துடைத்து மினுக்கும் சிறுவர்கள், போட்டர்கள், ஹோட்டல் வெய்ட்டர்கள், விபச்சாரிகள், விபச்சார தொழிலுக்கு ஆள் பிடிக்கும் தரகர்கள் என்ற வகையான சேவைத் தொழிலாளர் பெருகுகின்றனர். இத்தகைய தொழிலாளர்வகுப்பை பொறுக்கித் தொழிலாளர் வகுப்பு (Lumpun Proletariat) என்பர். மூன்றும் உலகின் நகரங்களில் சேரிகளின் பெருக்கமும் பொறுக்கி தொழிலாள வகுப்பின் பெருக்கமும் சமாந்தரமாக வளர்ந்து செல்லும். இடைத்தரத் தொழில்களான சேவைத் தொழில்கள் உப்பிப் பெருத்தலை (The hypertrophy of the tertiary Sector) மூன்றும் உலக முதலாளித்துவத்தின் ஒரு அம்சமாகச் சமீர் அமின் குறிப்பிடுகிறார். இவ்வளர்ச்சி அடிப்படையான நோயின் வெளிப்பாடே அன்றி வேறல்ல. இந்த நோயின் இன்னொரு வெளிப்பாடுதான் மூன்றும் உலகின் வேலையின்மைப் பிரச்சினை. சமீர் அமின் கணக்கின்படி 1972-ல் உலக வேலையின்மையின் 30% மூன்றும் உலகைச் சார்ந்ததாயிருந்தது. விருத்தியுற்ற நாடுகளின் நகரங்களில் வாழும் உழைப்பாளர் தொகையைவிட மூன்றும் உலகின் வேலையற்றோர் தொகை கூடியதாகும். மேலும் மூன்றும் உலகின் வேலையற்ற மக்கள் தொகையின் 1/3-ல் ஒரு பங்கினர் கிராமங்களைவிட்டு இடம்பெயர்ந்து பெருநகரங்களில் தஞ்சம் புகுந்தோராவர். இவர்கள் நகரங்களின் சேரிகளில் மிகவும் கீழான வாழ்க்கையை வாழும் படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

புவட்டோ றிக்கோ என்னும் மத்திய அமெரிக்க நாட்டின் உதாரணம் சிறந்த மாதிரியாகும். இந் நாட்டில் அமெரிக்க முதலீடுகள் கனடா மேற்கு ஐரோப்பா என்ற இருபகுதிகளையும் தவிர்த்து நோக்கின் மிக அதிகளவில் உண்டு. இம் முதலீடுகள் மார்ஷல் திட்டம் (Marshal Plan) போன்ற ஒரு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவை இதை Operation Bootstrap என்று குறிப்பிடுவர் இத் திட்டத்தின் முடிவில் புவட்டோ றிக்கோத் தீவின் வேலையின்மை 40% ஆக இருந்தது. இது எதை எடுத்துக்காட்டுகின்றதெனில் தங்கியிருக்கும் முறையிலான விருத்தி (dependent development) வேலையின்மைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவாது என்பதும் உண்மையில் அது வேலையின்மையைக் கூட்டும் என்பதும் ஆகும்.

இவ்வுண்மைகள் யாவும் ஒன்றைத் தெளிவாகத் தெளிவிக்கின்றன. அது யாதெனில் தேசிய முதலாளித்துவத்தின் தலைமையில் முதலாளித்துவப் பாதையில் மூன்றும் உலக நாடுகளை இட்டுச் செல்லுறு உலக முதலாளித்துவத்திடம் அவற்றை மேலும் இறுகப் பிணைப்பதால் இந் நாடுகளின் செல்வம் மேன்மேலும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதி போன்ற நிதி நிறுவனங்களாலும், பல்தேசிய நிறுவனங்களாலும் சூறையாடப்படுவதற்கே வழி வகுக்கும். உண்மையான விருத்திக்கான மார்க்கம் இது வல்ல இச்செல்வச் சூறையாடல் தான் மூன்றும் உலகின் விருத்திக் குறைவின் மூலகாரணம். இது இன்று நேற்று ஏற்பட்ட தற்செயல் நிகழ்வல்ல. மாறாக இதை நாம் ஒரு தொடர் நிகழ்வாக (a Continuing Process) காணுதல் வேண்டும். முன்னைய காலனிகள் அரசியல் விடுதலை பெற்ற பின்னர் இந்த சூறையாடல் அதிகரித்ததே அன்றிக் குறையவில்லை. அதாவது உள்நாட்டு முதலாளித்துவத்தின் அரசியல் தலைமையின் கீழ் தான் இது மோசமடைகிறது. எம். ஐ. ரி எனப்படும் அமெரிக்க நிறுவனத்தின் [மாசாசூ செட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தை எம். ஐ ரி என்ற எழுத்துக்கள் குறிக்கும்] மதிப்பீட்டின் படி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறைவிருத்தி நாடுகளின் தனிநபர் வருமானம் மேற்குலகின் தனிநபர் வருமானத்தின் அரைப்பங்காக இருந்தது. 1970-ம் ஆண்டில் இவ்விடைவெளி இருபது மடங்காக இருந்தது. நவகாலனித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வம் ''செல்வ'' நாடுகளுக்கும் ''வறிய'' நாடுகளுக்கும் இடையிலான இடைவெளியை மட்டும் அல்ல ''வறிய'' நாடுகளுக்குள்ளே ஏழைகளுக்கும் பணக்காரருக்கும் இடையிலான இடைவெளியையும் பன்மடங்கு கூட்டியுள்ளது. இவ்விடைவெளி வரவர அகன்று செல்கிறது. மூன்றும் உலகின் பணக்கார வகுப்பினரான மொத்த சனத்தொகையின் 5%த்தினர் ஏழைகளான 40% மக்கள் தொகையினரை விட 16 முதல் 30 மடங்கு வரையான செல்வத்தை உடமையாகப் பெறுகின்றனர்.

மூன்றும் உலகை முதலாளித்துவ மைய நாடுகளுடன் இணைப்பதனுல் இந் நாடுகளில் முதலாளித்துவ உறவுகள் விருத்தியுறுவதுடன் இந் நாடுகளின் சமூக பொருளியல் அமைப்பில் முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திற்கு வழி அமைக்கப்படும். இத்தகைய முதலாளித்துவம் தங்கியிருக்கும் தன்மையது; சமசீரற்ற வளர்ச்சியைத் தூண்டுவது; நாட்டின் பொருளியலை உருத்திரிவு செய்வது. மேற்குலகை பொறுத்தளவில் பொருளியலில் உபயோகிக்கப்படும் வளர்ச்சி (Growth) விருத்தி (Development) என்ற இரு சொற்களும் ஒரே கருத்தை உடையவை. மூன்றும் உலகில் வளர்ச்சி, விருத்தி இரண்டும் வெவ்வேறுனவை. வளர்ச்சி உள்ள போதும் குறைவிருத்தி ஏற்படும். இதனுல் தான் ஏ. ஜி. பிராங் ''குறைவிருத்தியின் விருத்தி'' என்று இதை விளக்கினுர்.

''லத்தின் அமெரிக்காவின் பொருளியல் ரீதியில் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைப்பதானது இன்றைய சூழ்நிலையில் லத்தின் அமெரிக்காவிற்கு உள்ளேயே ஏழைகளின் வளங்களை செல்வந்தர்கள் பறித்தெடுக்க வகை செய்வதோடு லத்தின் அமெரிக்க ஏழைகளை மேலும் ஏழைகளாக்கவும் ஐக்கிய அமெரிக்க செல்வர்களை மேன்மேலும் செல்வந்தர்கள் ஆக்கவும் உதவும்'' (ஏ. ஜி. பிராங்) மூன்றும் உலகின் வகுப்பு முதலாளித்துவ வளர்ச்சியை ஏற்படுத்தும் சக்தியற்றது. ஆனுல் மேற்குலக முதலாளி வர்க்கம் வரலாற்று ரீதியில் விருத்திக்கு-கைத்தொழில் புரட்சிக்கு தான் ஆற்றிய பங்கை நிரூபித்துவிட்டது. ஆனுல் மூன்றும் உலகின் முதலாளி வகுப்பின் செயற் திட்டங்கள் விருத்திக் குறைவைத்தான் விருத்தியாக்கின்றது. (The Development of Underdevelopment) இதனுல் ஏ. ஜி. பிராங் மூன்றும் உலகின் முதலாளித்துவ வகுப்பை பொறுக்கி முதலாளி வர்க்கம் (Lumpun Bourgeoisie) என்றும் அது ஏற்படுத்தும் விருத்தியை பொறுக்கியின விருத்தி (Lumpun Development) என்றும் கூறினுர். (Lumpun என்ற சொல்லை உதிரி என்றும் மொழி பெயர்க்கலாம். உதிரிப் பாட்டாளிகள், உதிரி வர்க்கங்கள் என்ற தொடர்கள் வழக்கில் உள்ளன. உதிரிகளின் கீழான நடத்தையை ''பொறுக்கி'' என்னும் பேச்சு வழக்குச் சொல் சிறப்பை வெளியிடுவதால் பொறுக்கி என்ற சொல்லை உபயோகித்தோம்.)

குறைவிருத்தி தங்கியிருத்தலின் விளைவு ஆதலால் விடுதலைப் பாதை எதுவென்பது வெளிப்படை. உலக முதலாளித்துவ பிணைப்பில் இருந்து விடுவித்துக் கொள்வதைத் தவிர வேறுவழி இல்லை. நவகாலனித்துவ தங்கியிருத்தலுக்கான சமூக அடித்தளம் நவகாலனி நாட்டிற்குள்ளேயே இருக்கின்றது. இந்த சமூக அடித்தளம் (அடிப்படையாக) முதலாளித்துவ அமைப்பே. இந்த முதலாளித்துவ அமைப்புத்தான் விடுதலைக்குத் தடையாக இருப்பது. ஆதலால் உலக முதலாளித்துவ அமைப்பில் இருந்து மூன்றும் உலகம் தம்மை விடுவித்துக் கொள்ளுதல் தத்தம் நாடுகளின் முதலாளித்துவ அமைப்பை தூக்கி எறிவதால் தான் சாத்தியமாகும். ''முதலாளித்துவ மையத்துடன் சார்பு நாடாகப் பிணைக்கப்பட்ட எந்தவொரு நாடாவது உலக முதலாளித்துவ அமைப்பில் இருந்து விடுதலை பெற்று, பொருளியல் விருத்தியுற்ற நாடு என்ற தகுதியை, முதலாளித்துவ அமைப்பையே இறுதியில் கைவிடும் முறையில் அல்லாமல் பெற்றது கிடையாது'' (ஏ. ஜி. பிராங்)

இன்னேர் உண்மையையும் இச்சமயத்தில் நாம் குறிப்பிடல் வேண்டும். முதலாளித்துவத்தில் இருந்து விடுபட்டால் மட்டும் போதாது உலக சோஷலிச பொருளியலுடன் விடுதலை பெற்ற நாடு தன்னைப் பங்காளியாக்கிக் கொள்ள வேண்டும் பொல்பொட், இங்சாரி, கீசாம்பன் (23ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பங்களாதேஷ் விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஓர் ஒப்பீடு

—செம்பாட்டான்—

**பங்களாதேஷ்** விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்த போதிலும் மொத்தமாக பார்க்கின்ற போது பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றில் பங்களாதேஷ் விடுதலைப போராட்டமானது பாகிஸ்தான் சுதந்திரமடைந்த 1947ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரை நடைபெற்றது. 1971 மார்கழி 20ம் திகதி பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து பங்களாதேஷ் சுதந்திரமடைந்தது. இப்பங்களாதேஷ் என்பது முன்னையகிழக்குப் பாகிஸ்தான் ஆகும், 1971 க்கு முன்னர் பாகிஸ்தான் என்பது கிழக்குப் பாகிஸ்தானையும் மேற்குப் பாகிஸ்தானையும் இணைத்த ஒரு நாடாகும். தமிழ் பேசும் மக்களின் போராட்டமும் ஆங்கிலேயரின் வருகையோடு தோற்றம் பெற்று, பல பரிமாணங்களை அடைந்து இன்று தனி நாட்டுக்கான போராட்டமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இரண்டு விடுதலைப் போராட்டங்களும் தேசிய இனங்களினுடைய விடுதலைப் போராட்டங்களாகும். ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களான வங்காளிகளும், தமிழர்களும் ஒடுக்குகின்ற தேசிய இனங்களின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக நடாத்தியதும் நடாத்துகின்றதுமான போராட்டங்களாகும். இரண்டு தேசிய இனங்களும் வாழுகின்ற நாடுகளான பங்களாதேசும், இலங்கையும் இந்துசமுத்திர பிராந்தியத்திற்குள் உள்ள தென்னாசிய நாடுகளாகும். தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தை பொறுத்த வரை அதுதன்னை ஒடுக்குகின்ற சிறீலங்காவுடன் நிலத்தினால் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் பங்களாதேசுக்கும் அதனை ஒடுக்கிய மேற்கு பாகிஸ்தானுக்கும் நடுவில் 1200 மைல் நீளத்தில் இந்தியா காணப்பட்டது- மேலும் முக்கியமாக இவ்விரண்டு விடுதலைப் போராட்டத்திலும் இந்தியாவின் தலையீடு காணப்பட்டது.

பங்களாதேஷ் மக்கள் அனுபவித்த ஒடுக்குமுறைகளை பார்ப்போமாயின் பாகிஸ்தான் பங்களாதேசை ஓர் காலனி நாடு போலவே நடாத்தியது, மொத்த பாகிஸ்தானின் (மேற்கு பாகிஸ்தான் + பங்களாதேஷ்) சனத்தொகையில் 56 வீதத்தினரும் பங்களாதேசின் சனத்தொகையில் 98வீதத்தினரும் பேசும் மொழியான வங்காள மொழி தேசிய மொழி ஆவதிலிருந்து புறக்கணிக்கப்பட்டது. 4வீதத்தினர் மட்டும் பேசுகின்ற உருது மொழியே தேசிய மொழியாகப்பட்டது. மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 60வீதம் மேற்கு பாகிஸ்தானின் பாதுகாப்புக்காகவும் 30வீதம்மேற்கு பாகிஸ்தானின் பொருளாதார நலன்களுக்காகவும செலவழிக்கப்பட்டது. அதே வேளை 10வீதம் மட்டும்மே பங்களாதேசுக்கு பயன் படுத்தப்பட்டது. மேலும் இராணுவத்தினரில் 90 வீதத்தினரும் மொத்த சிவில் சேவையாளர்களில் 85 வீதத்தினரும் மேற்கு பாகிஸ்தானியர்களாக காணப்பட்டனர். மொத்த வேலைவாய்ப்பில் 80 வீதம் மேற்கு பாகிஸ்தானியருக்கே வழங்கப்பட்டது. அந்நிய செலாவணியைப் பொறுத்த வரையிலும் அதன் 80வீதத்தினை பங்களாதேஷ் ஈட்டிக் கொடுத்த போதும் அவற்றில் பெருமளவு மேற்கு பாகிஸ்தானின் நலனுக்கே உபயோகிக்கப்பட்டது. அந்நிய நாட்டுக்கடன் அந்நியஸ்தாபனங்களின் உதவிகள் என்பனவற்றில் பெருபாலானவை மேற்கு பாகிஸ்தானுக்கே பயன்படுத்தப்பட்டன. இவற்றினைவிட அரச தலைமைக் காரியாலயங்களில் பெரும்பாலானவை மேற்கு பாகிஸ்தானி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேயே உள்ளன. மேற்கு பாகிஸ்தானை விட பங்களாதேசில் பொருட்களின் விலை அதிகமாக இருந்தது தொழிற்சாலைகளுக்கான கூலிகளிலும் மேற்கு பாகிஸ்தானில் கூடுதலான கூலியும் கிழக்கு பாகிஸ்தானில் குறைந்தளவு கூலியும் வழங்கப்பட்டன. மொத்தமாக பார்க்குமிடத்து ஒரு காலனி நாட்டைச் சுரண்டுவது போல பங்களாதேஷ் மேற்கு பாகிஸ்தானால் சுரண்டப்பட்டு சுரண்டல் மிகை மேற்குப் பாகிஸ்தானின் நலன்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

இதே ஒடுக்குமுறைகள் பலவற்றை தமிழ் பேசும் மக்கள் அனுபவித்த போதிலும் ஈழத்தில் பிரதான ஒடுக்குமுறை குடியேற்றம் என்கின்ற நிலச் சூறையாடலே யாகும். இந் நிலச் சூறையாடல்களால் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய மாவட்டங்களான அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இழந்துள்ளார்கள். இந் நிலச் சூறையாடல்கள் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத விவசாயக்குடியேற்றம், மீனவ குடியேற்றம், கைத்தொழிற் குடியேற்றம், வியாபாரக்குடியேற்றம், புனித பிரதேசக்குடியேற்றம் முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றம் என்னும் வழிகளில் நடைபெறுகின்றன. இவ்வகையான நிலச் சூறையாடல் முறைகளினால் அம்பாறை மாவட்டத்தில் 2/3 பகுதிகளும், திருகோணமலை மாவட்டத்தில் 3/5 பகுதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், நாயாறு, கொக்குத்தொடுவாய், போன்ற பகுதிகளும் வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், கொக்கச்சான் குளம் போன்ற பகுதிகளும் மன்னார் மாவட்டத்தில் கொண்டைச்சி, மடு றோட் போன்ற பகுதிகளும் தமிழ் பேசும் மக்களின் இழந்த பகுதிகளாக காணப்படுகின்றன. தமிழ் பேசும்மக்களினுடைய மொத்த பிரதேசத்தில் 1921 இல் 2.2%மாக இருந்த சிங்கள மக்கள் 1981 இல் 13.2%மாக வளர்ச்சி அடைந்துள்ளனர்.

நிலச் சூறையாலை விட பொருளாதார சுரண்டல், கல்வியில் பாரபட்சம், மொழிப் பாரபட்சம், அரச உத்தியோகங்களில் பாரபட்சம், திட்டமிட்ட இன அழிப்புகள் ஒடுக்குமுறைச் சட்டங்கள் என்பன ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்குகின்ற ஏனைய ஒடுக்குமுறைகளாகும்.

ஒடுக்குமுறைகளைப் பொறுத்த வரை குடியேற்றம் என்கிற நிலச் சூறையாடல் தவிர ஏனைய ஒடுக்குமுறைகளை பங்களாதேஷ் மக்களும். ஈழத்தில் தமிழ் பேசும் மக்களும் அனுபவித்தார் குடியேற்றம் என்கிற. மோசகரமான ஒடுக்குமுறையை தமிழ் பேசும் மக்கள் மேலதிகமாக அனுபவிக்கின்றனர்.

திட்டமிட்ட இன அழிப்புகள் தொடர்பாக. பங்களாதேசில் 1952 வைகாசியில் மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 26மாணவர்கள் கொலை செய்யப்பட்டு 400க்கும் மேற்பட்டோர் காயப் படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 1954, 1962, 1969 போன்ற ஆண்டுகளில் திட்டமிட்ட இன அழிப்புகள் வளர்க்கப்பட்டு 1971 பங்குனியில் அது உச்சக்கட்டத்தை அடைந்தது 1971 பங்குனி 3ம் திகதி முஜீபூர்ரகுமான் தலைமை தாங்கும் அவாமி லீக் கினல் "மக்களால் தெரிவு செய்யப்பட்டோரிடம் ஆட்சியை ஒப்படையுங்கள்' என்ற கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒத்துழையாமை போராட்டத்தில் 350 பேர் கொல்லப்பட்டனர். 1000 பேர் காயமடைந்தனர். பின்னர் பங்குனி 25ம் திகதி நள்ளிரவு 11 மணியளவில் டாக்காவில் நித்திரையில் ஆழ்ந்திருந்த அப்பாவி மக்கள் மீது நடாத்தப் பட்ட தாக்குதல்களினாலும், 30 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டு ஒரு கோடி மக்கள் அகதிகளாக இந்தியாவிற்குள் புகுந்தனர். டாக்கா பல்கலைக்கழக மாணவர் விடுதியின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 300 மாணவர்கள் கொல்லப்பட்டனர். 14 பேராசிரியர்கள் கொல்லப்பட்டனர். 75%மான பல்கலைக்கழக கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன.

ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் 1958, 1977, 1981, 1983 போன்ற ஆண்டுகளில் மிகப்பெரி இன அழிப்புக்கு உள்ளாக்கப் பட்டனர். பயங்கர வாதத்தடைச் சட்டம் தொடக்கம் பாதுகாப்பு வலயம் வரை இன அழிப்புகளை தீவிரப்படுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றன. தென்னாசியாவிலுள்ள மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ் பொது நூல் நிலையம் அரசினால் தீயிட்டு பொசுக்கப் பட்டது.

இந்தியாவின் தலையீட்டைப் பொறுத்த வரை பங்களாதேசில் இருந்து ஒருகோடி மக்கள் இந்தியாவிற்குள் அகதிகளாக சென்றதை காரணமாகவைத்து 1971 மார்கழியில் இந்திய இராணுவம் பாகிஸ்தானுக்குள் புகுந்து 1971 மார்கழி 2இல் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவிடம் சரணடைந்தது. இப்படையெடுப்பின் மூலம் பங்களாதேஷ் மக்களின் தன்னெழுச்சியான போராட்ட வளர்ச்சியை இந்தியா தடுத்தது. சமுதாய மாற்றத்துடன் கூடிய ''மக்கள் அரசு'' ஒன்றை பங்களாதேஷ் மக்கள் உருவாக்கும் பணியிலிருந்து பலவந்தமாக தடுத்து நிறுத்தப் பட்டார்கள். இந்தியா தன்னுடைய சுய நலன்களுக்காக பங்களாதேஷ் மக்களை பகடைக்காயாக்கி பொம்மை அரசுஒன்று உருவாக்குவதற்கு வழிசெய்தது. இந்தத் தலையீட்டுக்கு இந்தியாவின் பக்கத்தில் பலம் பொருந்திய பாகிஸ்தானை உடைப்பதன் மூலம் அதனை பலவீனமாக்கல், தன்னுடைய நாட்டுக்கு பக்கத்தில் ஒரு சோசலிச அரசை வர விடாமல் தடுத்தல், அமெரிக்காவின் ஆதிக்கத்தை தென்னாசியாவிற்குள் பலவீனமாக்கல், தான் ஒரு பிராந்திய வல்லரசு என்பதை நிலை நிறுத்தல் என்பதே காரணங்களாக அமைந்தன. இந்தியாவின் இத்தகைய தலையீட்டினால் பங்களாதேஷ் மக்கள் மேற்கு பாகிஸ்தானின் உயிர் அச்சுறுத்தல்களிலிருந்து விடுபட்டார்களே தவிர தாம் எதிர்பார்த்த சமூக பொருளாதார விடுதலையை அவர்களால் பெற்றுவிடமுடியவில்லை.

ஈழத்திலும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடு பெருகியுள்ளது. இந்தியா தன்னுடைய நலன்களுக்காக தமிழ் பேசும் மக்களையும் அவர்களுக்காக போராடுகின்ற விடுதலை இயக்கங்களையும் பயன்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய பயன்படுத்தல் முயற்சிகளுக்கு தமிழ் பேசும் மக்களும் அவர்களின் விடுதலை இயக்கங்களும் பலியாவார்களேயானால் பங்களாதேஷ் மக்களுக்கு ஏற்பட்ட நிலையே நமக்கும் ஏற்படலாம் அதாவது இத்தகைய தலையீட்டின் மூலம் கிடைக்கும் தீர்வினால் சிறீலங்கா அரசின் உயிர் அச்சுறுத்தல்களிலிருந்து நாம் விடுதலை அடையலாம் ஆனால் நாம் எதிர்பார்த்துப் போராடிய சமூக, பொருளாதார, விடுதலையுடன் கூடிய ''மக்கள் அரசு'' ஒன்றை உருவாக்கல் என்ற நிலையை எம்மால் பெற்று விட முடியாது. ★

## நவகாலனித் . . .

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரின் தலைமையில் கம்பூஜிய நாடு அடைந்த வீழ்ச்சி நமக்கு இவ் வகையில் ஓர் படிப்பினையாகும். காலனித்துவ அரை காலனித்துவ நாடுகள் உலக சோஷலிச அமைப்பின் பங்காளிகளாக மாறி வளர்ச்சிப் பாதையில் செல்வதையே 1920 ம் ஆண்டிலேயே லெனின் வற்புறுத்தினார். இக் கருத்தில் இருந்து மாறுபடுகிறார் சமிர் அமின் [Samir Amin] சமிர் அமின் கருத்து எமக்கு உடன்பாடு உடையதன்று.

உண்மையான பொருளியல் விருத்தியும் முன்னேற்றமும் உண்மையான தேசிய விடுதலையின் அடிப்படையிலேயே அமைதல் முடியும். இன்றைய உலக அமைப்பில் அத்தகைய தேசிய விடுதலை முதலாளித்துவ எதிர்ப்பு நடவடிக்கைகளாக அமையும் மாற்றங்களால் மட்டுமே ஏற்படமுடியும்.

மார்க்சிய இயங்கியலின் அடிப்படை விதியொன்று எமது அரசியல் கொள்கைக்கு ஆதாரமாக உள்ளது. சமூகத்தின் வளர்ச்சியில் இருவகைக் காரணிகளைப் பற்றிக் கூறுவர். ஒன்று சமூகத்தின் உள்ளேயே அமைந்திருக்கும் உட்காரணிகள் (Internal Causes) மற்றது குறித்த சமூகத்திற்கு வெளியே உள்ள வெளிக்காரணிகள் (External Causes) மார்க்சியம் சமூக வளர்ச்சியிலும் மாற்றத்திலும் சமூகத்தின் உட்காரணிகளே பிரதான பங்கினைப் பெறுவதாகக் கருதுகின்றது. வெளிச்சக்திகள் உட்காரணிகளுக்குத் துணையான இரண்டாம் பட்ச காரணிகள் ஆகும். வளர்ச்சி வெளித்தோற்றத்தில் எவ்விதம் இருப்பினும் உட்காரணிகள் அதன் தீர்மான சக்திகள். இவ்வுண்மையை மார்க்சும் மாஓவும் சிறப்பாக எடுத்து விளக்கியுள்ளனர். நவகாலனித்துவத் தங்கியிருத்தலின் ஆணிவேர் நவகாலனிகளின் உள்ளேயே இருக்கின்றது. இந்த உட்காரணிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் புறவலயத்தின் முதலாளித்துவ உறவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த மாற்றம் சோஷலிசப் புரட்சியினால் தான் சாதிக்கப்படுதல் முடியும்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னி மண்ணில் தொடரும் அவலங்கள்

-பிறேம்-

கண்ணுக் கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்து கிடக்கும் காடுகளையும் நெல் வயல்களையும் வளமான நிலப்பரப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இவ்வன்னி பிரதேசம் இன்று படிப்படியாக சிறிலங்கா அரச இராணுவ ஏவல் நாய்களின் கொடூரமான செயற்பாடுகளினால் சீரழிக்கப்பட்டு அம் மண்ணின் பிரத்தியேகத் தன்மையை இழந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கான சகல நடவடிக்கைகளிலும் முழு மூச்சுடன் ஈடுபடும் சிறிலங்கா அரசானது குடியேற்றத் திட்டங்கள் என்ற போர்வையில் வன்னி மண்ணை திட்டமிட்ட முறையில் அபகரித்து வந்துள்ளது.

இச் செயற்பாடுகளின் உச்சக் கட்டமாக அத்துலத்முதலி வவுனியா முதல் ஆனையிறவு வரை இரண்டரை லட்சம் சிங்களவரை குடியேற்றும் தனது திட்டத்தை வெளியிட்டதும் இந்நிலையில் போராளிகளின் தாக்குதல்கள் பாரிய இழப்பை வன்னிப் பகுதியில் அரச இராணுவத்திற்கு ஏற்படுத்தியதும் அத்திட்டத்தை கைவிட்டு அத்திட்டம் மீண்டும் வேறொரு வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுத பாணிகளான குண்டர்கள் (இவர்கள் இராணுவம் அல்ல ஆனால் இராணுவத்திற்கு நிகரானவர்களே) வன்னிமண்ணில் குடியேற்றப்படுகிறார்கள். இந்நிகழ்வுகளை நெடுங்கேணி பகுதியை அடுத்துக் காணப்படும் கென்ற், டொலர் பண்ணைகளில் காண முடிகின்றது. கொக்கிளாய், நாயாறு பகுதி மீனவர்களும் இதே முறையில் குடியேற்றப்படவாய்ப்புண்டு.

இவ்விதமான குடியேற்றங்கள் பற்றி பிரபல அரசியல் சிந்தனையாளராகிய மாக்கிய வல்லி பின்வரும் கருத்தைக் கொண்டிருந்தார். அதாவது இக்குடியேற்றவாதிகட்கு வேதனம் வழங்க வேண்டியதில்லை. மேலும் இராணுவத்தை போலன்றி இவர்கள் அம் மண்ணிற்கு பரிச்சயமானவர்களாகி விடுவர். காலம் காலமாக அம் மண்ணில் உயிர் வாழ்வதற்காக உணர்ச்சியுடன் நின்று தாக்குப் பிடிக்கக் கூடியவர்கள் என்றார்.

குடியேற்றங்கள் மூலம் தான் இங்லாந்து ஐரிஸ் நாட்டில் ஐரிஸ் மொழியையும் அவர்களின் கலாச்சாரத்தையும் அழித்தொழிப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டது என்பது நோக்கத்தக்கது.

இவற்றினை சிந்தித்துப் பார்க்கும் பொழுது வன்னி மண்ணிற்கு எத்தகைய ஆபத்து ஏற்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது.

பங்குனி மாதம் 20ஆம் தேதி அதிகாலை இவ்வாறு தான் நெடுங்கேணி கிராமம் சுற்றி வளைக்கப்பட்டது.

நாள் முழுவதும் வயல்களிலும் தோட்டத்திலும் உழைத்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அவ்வேளையில் அதிகாலையின் நிசப்தத்தை இராணுவ வாகனங்களின் உறுமல் குலைத்தது. என்ன நடந்தது? ஏது நடந்தது? என அம்மக்கள் அறிய முன்னரே கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு விட்டது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், கைக் குண்டுச் சத்தங்களும் காலை வேளையில் அப்பிரதேசத்தையே அதிர வைத்தன. உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகளும் சிறுவர்களும் ஏக்கமடைந்து வீரிட்டு அழ ஆரம்பித்தனர் அவர்களைத் தேற்ற முடியாமல் பெற்றோர் திகைத்து நின்றனர்- விடியற் காலையிலேயே கறுப்புச்சட்டைக்காரரும், கென்ற்' டொலர். பண்ணைகளில் குடியேறியிருந்த சிங்களவரும் சேர்ந்து அக் கிராமத்தையே சீரழித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைகள், வீடுகள் கொள்ளையிடப் பட்டன. பின் வீடுகள் தீயிடப்பட்டன. அம் மக்களின் உழைப்பு யாவும் கண் முன்னு லேயே அழிக்கப்பட்டன. பெற்றோர், சகோ தர, சகோதரிகள் தம் முன்னுலேயே சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டு மக்கள் செயவ தறியாமல் கலங்கி நின்றனர்.

வயோதிபர் ஒருவரின் கைகளை துப் பாக்கிச்சன்னங்கள் சிதைத்திருந்தன. பெண் ஒருவரின் தோடுகள் காதில் இருந்து அறுத் தெடுக்கப்பட்டன. இளம் குடும்பப் பெண் ஒருவர் பாலியல் சித்திரவதை செய்யப் பட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கூட தடுக்க முடியாமல் போய் விட்டதே என மிகுந்த வேதனையுடன் அப்பகுதி பாடசாலை அதிபர் ஒருவர் கூறினர். நகைகள் கொள் ளையிடப்பட்டன. ஏனைய சேமிப்புக்களும் விட்டு வைக்கப் படவில்லை. முடிந்தவற்றை கொள்ளையடித்து விட்டு ஏனையவற்றிற்கு தீயிட்டனர். பன்னிரண்டு பேர் வரை கொலை செய்யப்பட்டனர். கைது செய்து சென்ற வர்களின் விபரங்கள் தெரியவில்லை. பல சடலங்களை தம்முடன் பிணைந் தின்னிகள் கொண்டு சென்றனர்.

நெடுங்கேணியை அண்மித்துக் காணப் படும் பெரியகுளம் கிராமத்திலும் இதே நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வீடுகள் தீயிடப்பட்டன. இருவர் கொலை செய்யப் பட்டு கடை ஒன்றினுள் இட்டு எரிக்கப் பட்டனர்.

அங்கிருந்து அரச பயங்கரவாதிகள் வெளியேறியதும் அப்பிரதேசமே சோபை யிழந்து காணப்பட்டது. மக்கள் மனத்தாக் கத்தில் இருந்து விடுபடாமல் திகைத்து நின்றனர். எங்கும் மரண ஓலம். கிராமமே சோகத்தில் மூழ்கியிருந்தது.

சிறிலங்கா அரச ஏவல் நாய்கள் வழ மையாக கொள்ளையடிப்பதிலும் கொலை செய்வதிலும் ஈடுபட்டு வந்தனர். எனினும் தற்போது கற்பழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது அவதானிக்கப்படுகிறது. அண் மையில் வன்னியின் இன்னுெரு பகுதியான துணுக்காயிலும் இத்தகைய பாலியல் நட வடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்கள் மீதான இவ் வன்முறைப் பிரயோகமானது. எமது மக்களை உளவியல் ரீதியில் சிரழித்து அப்பிரதேசத்தை விட்டே வெளியேறுவதற்கான நடவடிக்கையே.

வன்னியின் எல்லைப் புறக் கிராமங்களி லும்,நெடுங்கேணியிலும் அதன் அயற்கிராமங் களிலும் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள் ளப்பட்டு வரும் நடவடிக்கைகளானவை எம் மவர்களை அப்பகுதிகளில் இருந்து வெளி யேற்றி வன்னி மண்ணை தமது கட்டுப்பாட் டின் கீழ் கொண்டு வரும் செயற்பாடுகளே என்பதில் சந்தேகமில்லை. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வன்னியில் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நடவடிக் கை வன்னி மக்கள் வீரத்துடன் எதிர்த்த திருவர். வாழ்க்கை முறை காரணமாக பெரும் பாலும் இவர்கள் அனைவருமே வேட்டைத் துப்பாக்கிகளை கையாளத் தெரிந்தவர்கள்.

குறிபார்த்து சுடும் திறமையுடை யோரை சாதாரணமாக வன்னியில் நாம் காணலாம். இத்தனை அவலங்கட்கும் மத்தி யில் தமது சொந்தமண்ணை இருந்து அந்நி யரை வெளியேற்ற வேண்டும் என்ற இலட் சியம் ஒவ்வொருவர் மனதிலும் உரம் பெற்று வருகிறது.

தன்னிடம் இருந்த வேட்டைத் துப் பாக்கி அரசினுல் பறித்தெடுக்கப்பட்டதை கோபத்துடன் நினைவு கூர்ந்த விவசாயி ஒருவர் எவ்வாறெனினும் துப்பாக்கி ஒன்றை பெற்று ஒரு அரச ஏவல் நாயையாவது சுட்டு வீழ்த்துவதே தனது கடமை என்ருர்.

நெடுங்கேணி பகுதியில் கிராம மக் களுடன் உரையாடிய போது தாம் இரண்டு கைகளிலும் ஆயுதமேந்தி எனினும் வள மிகு வன்னி நாட்டிலிருந்து அந்நிய ஏவல் நாய்களை வெளியேற்றியே தீருவோம் என உணர்வு பூர்வமாக கூறினுர்.

அவர்களிடம் இருந்து விடை பெற்ற பொழுது வன்னி மண்ணைவிருந்து சிறிலங்கா அரச ஏவல் நாய்கள் வெளியேறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நினைவே என் நெஞ்சில் நிறைந்திருந்தது. ✤



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிலிப்பைன்ஸ் தேர்தல்

# மக்கள் சக்திக்கஞ்சி அமெரிக்கா கண்ட சமரச நாடகம்

வரலாற்றின் நாயகர்கள் தனிநபர்களல்ல, ஆயுதங்களல்ல, மக்களே என்பதனை பிலிப்பைன்ஸ் மீண்டுமொருமுறை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. மக்களை அடக்கி ஒடுக்கின்ற ஆட்சி, மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மறுக்கின்ற ஆட்சி. அது எவ்வளவுதான் நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்தாலும் ஒன்று திரண்ட மக்கள் சக்திக்கு முன் தலை வணங்கியே தீரவேண்டும் என்பது உலக வரலாற்றில் மீண்டுமொருமுறை பொறிக்கப்பட்டு விட்டது. இந்த வகையில் பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட சம்பவம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால் மார்க்கோஸ் பிலிப்பைன்சில் இருந்து துரத்தப்பட்ட போதும் அது தனி ஒரு மார்கோஸின் தோல்வியாகவும் மக்களின் பெயரளவிலான வெற்றியாகவும் அமைந்ததே தவிர முழு மக்களினதும் உண்மையான வெற்றியாக அமையவில்லை. ஏனெனில் மக்கள் மீதான சுரண்டல், மக்கள் மீதான ஒடுக்குமுறை அனைத்தையும் வெற்றி கொண்டு முழுமக்களினதும் விடுதலையை உறுதிப் படுத்தும் அளவிற்கு அரசியல் மாற்றம் எதுவும் பிலிப்பைன்ஸில் இடம் பெறவில்லை. சுருங்கக்கூறின் அமெரிக்கத் தலைமையிலான நவகாலனித்துவம் பிலிப்பைன்ஸில் ஒரு நபரை பதவியில் இருந்து துரத்தி, அவ்விடத்திற்கு வேறு ஒருவரைக் கொண்டு வந்ததன் மூலம் தனது நிலையினை தற்காலிகமாக உறுதிப் படுத்திக் கொண்டுள்ளது.

தென்கிழக்காசியாவில் 7000 தீவுக் கூட்டங்களையும் 5 கோடியே 50லட்சம் மக்கள் கூட்டத்தினையும் கொண்ட ஒருநாடு தான் பிலிப்பைன்ஸ். காலனித்துவத்தின் இயலாமையின் பின்னர் பொம்மை அரசு ஒன்றினை ஏற்படுத்தி அதனூடாக காலனித்துவத்தின் போது எவ்வெவ் நலன்களை பெறக்கூடியதாக இருந்ததோ அதே நலன்களை இப் பொம்மை அரசின் ஊடாக பெற்றுக்கொள்ளும் நவகாலனித்துவத்தின் சுரண்டலுக்கு பலியான நாடுகளில் பிலிப்பைன்ஸ் தலையானது. இந்த வகையில் பிலிபைன்ஸில் மார்கோஸ் அரசு அமெரிக்காவின் கைப்பொம்மையாகவே விளங்கியது. 1965இல் பிலிப்பைன்ஸில் 6வது ஜனாதிபதியாக மார்கோஸ் பதவியேற்றதில் இருந்து 20வருடங்களாக மார்கோஸின் சீர் கெட்ட ஆட்சி, பிலிப்பைன்ஸில் நிலைத்தது. தனது விசுவாசம் மிக்க எஜமானர்களுக்கு எதிராக மக்கள் எழுச்சி ஏற்படாத வண்ணம் தடை செய்வதற்காக 1972 செப்டெம்பர் மாதம் 21ம் திகதி பிலிப்பைன்ஸில் இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

அமெரிக்காவிற்கு வெளியே, அமெரிக்காவின் பெரிய இராணுவத் தளம் பிலிப்பைன்ஸிலேயே அமைந்துள்ளது. இத்தளத்தில் 35,000 இற்கும் மேற்பட்ட இராணுவவீரர்கள் கடமையில் உள்ளனர். பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், பொருளாதார, கலாச்சாரச் சீரழிவுகளுக்குத் துணையாக இவ் இராணுவத தளம் அமைந்திருந்தது. நவகாலனித்துவம் தனது கால்களை மூன்றாம் உலக நாடுகளில் ஊன்றுவதற்கு பிலிப்பைன்ஸ் ஒரு தளப் பிராந்தியமாகவே அமைந்தது.

அமெரிக்காவின் சுரண்டல் பிலிப்பைன்சை பெருமளவில் பாதித்தது. பொருளாதார ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் பிலிப்பைன்ஸ் மக்கள் தனித்துவமற்றவர்களாகச் சிதைக்கப்பட்டனர். பல் தேசியக் கம்பனிகள் பிலிப்பைன்ஸில் இட்ட மூலதனத்தினை விட பன்மடங்கு தொகையினை இலாபமாக அமெரிக்காவுக்குக் கொண்டுபோய்ச் சேர்ந்தன. அமெரிக்க உற்பத்திகளுக்கு பிலிப்பைன்ஸ் பிரதானமான சந்தையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்கியது. சுரண்டலுக்குட்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்ட மக்கள் வறுமைச் சக்கரத்தினுள் சிக்குண்டனர். இவ்வறுமையின் விளைவு பிலிப்பைன்ஸ் மக்களை மலிவுக் கூலிகளாக்கி, மக்களின் உழைப்பு நவகாலனித்துவத்தால் இலகுவாக சுரண்டப்படுவதற்கு வழிகோலிற்று. வறுமையின் அகோரத்தால் எதையும் இழக்கும் நிலைக்கு பிலிப்பைன்ஸ் மக்கள் தள்ளப்பட்டனர்.

அமெரிக்காவின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் ஏற்பட்ட கலாச்சார சீரழிவுகள் பிலிப்பைன்ஸ் மக்களை பெரும்பாதிப்பிற்கு உட்படுத்தியது. பிலிப்பைன்ஸில் சில தீவுக்கூட்டங்கள் உத்தியோக பூர்வமாகவே, 'சிவப்பு விளக்கு'ப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளன. அமெரிக்கர்கள் தங்கள் ஒய்வு நேரங்களில் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதற்காக பிலிப்பைன்ஸின் கலாச்சாரம் நிர்வாணமாக்கப்பட்டது. சிவப்பு விளக்குப் பகுதிகளில் தாயும் மகளும் ஒருவனுக்கே, ஒரே நேரத்தில் பள்ளியறைப் பாவைகளாக ஆகும் அளவிற்கு அங்கு விபச்சாரம் வாழ்க்கை முறை ஆக்கப்பட்டுள்ளது. இச் சிவப்பு விளக்குப் பகுதிகளில் விபச்சாரியாக வாழ்வதென்பது வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் ஓர் அங்கம் எனும் எண்ணம் பிலிப்பைன்ஸ் பெண்களுக்கு ஏற்படக் கூடிய வகையில் பிலிப்பைன்ஸ் கலாச்சாரம் சீரழிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி 'நீலப் படங்களை' [BLUE FILMS] படமாக்குவதில் பிலிப்பைன்ஸ் உலகிலேயே இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது.

இத்தகைய கொடூரமான சுரண்டல்களுக்கும் சீரழிவுகளுக்கும் உட்படுத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் மக்கள் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தத் தொடங்கினர். மார்க்கோஸின் ஆட்சிக்கு எதிராக மட்டுமன்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் நவகாலனித்துவத்திற்கும் எதிராக அவர்களின் எதிர்ப்பு வலுவடையத் தொடங்கியது. மக்கள் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் ஆயுதப்பிரிவான புதிய மக்கள் படைக்கும் (NEW PEOPLE'S ARMY -NPA) தமது ஆதரவுகளை வழங்கத் தலைப்பட்டனர். இதனை உணர்ந்து கொண்ட அமெரிக்கா இரு கட்சி முறையினை பிலிப்பைன்ஸில் ஊக்குவித்தது. இருகட்சிமுறையானது புரட்சி வாதிகளுடன் மக்கள் ஐக்கியமாவதைத் தடுத்து கட்சியினை மாற்றியேனும் தமது நலனைப் பேணக் கூடியவர்களை தொடர்ந்து ஆட்சியில் அமர்த்துவதற்காக ஏகாதிபத்தியங்களினால் பயன்படுத்தப் படுகின்றது. இதன்படி பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் ஆட்சியில் இருக்கும் போதே தனது நலனை பேணக்கூடிய வேறொருவரை எதிர்க் கட்சியாக அங்கீகரிப்பதனூடாக மார்க்கோஸின் ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக வளர்ச்சியடைவதனைத் தடுப்பதும் தனது நலனைப் பேணக் கூடிய வகையில் அமைந்துள்ள எதிர்கட்சிக்கான ஆதரவாக மார்க்கோஸ் மீது ஏற்பட்ட வெறுப்பினை மாற்றுவதும் அமெரிக்காவின் திட்டமாகும். இந்த வகையில் திரு அக்கியுனோ எதிர்க்கட்சித் தலைவராக அமெரிக்காவினால் அங்கீகரிக்கப்பட்டார். தனக்குப் போட்டியாக எதிர்ச்சக்தி ஒன்று உருவாகுவதனை உணர்ந்து கொண்ட மார்க்கோஸ் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி விமான நிலையத்தில் வைத்து திரு. அக்கியுனோவை தனது கை ஆட்கள் மூலம் கொலை செய்து உண்மை வெளிவராமல் மறைப்பதற்காக கையாட்களையும் உடனடியாக சுட்டுக் கொல்வித்து விட்டு பழியினை புதிய மக்கள் படையினர் (NPA) மீது சுமத்தினர். ஆனால் மார்க்கோஸின் இச்செயல் மக்கள் மத்தியிலும் சர்வதேச ரீதியிலும் அம்பலமாகியது.

அக்கியுனோவின் மறைவின் பின்னர் திருமதி அக்கியுனோ பிலிப்பைன்ஸின் எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். மார்க்கோஸின் மீது மக்களின் வெறுப்பு அதிகரித்து ஆட்சிக்கெதிரான கிளர்ச்சிகள் இடம்பெறத்தொடங்கின. மார்க்கோஸிற்கு எதிரான மக்கள் போராட்டம் மார்க்கோஸ் ஆட்சியினை நிலைதளம்பச் செய்தது. இத்தருணத்தில் அமெரிக்கா 1979-ம் ஆண்டு ஈரானில் கற்றுக் கொண்ட பாடத்தினை உள்வாங்கிக் கொண்டு செயற்பட ஆரம்பித்தது. ஈரானில் ஷா மன்னனுக்கு எதிராக மக்களின் கிளர்ச்சி இடம்பெற்ற போது இறுதிவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஷா மன்னனுக்கு கை கொடுத்ததால் இறுதியில் மன்னன் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட போது அமெரிக்காவும் சேர்ந்தே ஈரானை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்ட கசப்பான அனுபவம் பிலிப்பைன்ஸில் அமெரிக்காவின் தீர்மானத்தை மாற்றி அமைத்தது. இதன்படி மக்களின் எதிர்ப்பு மார்க்கோஸிற்கு எதிராக வெளிப்படுத்தப்பட்டமையினால் தேர்தல் ஒன்றினை நடாத்தி தேர்தலில் வெற்றி பெறுபவரை ஆதரிப்பது எனும் நிலையினை அமெரிக்கா எடுத்துக் கொண்டது. இதற்கமைய பிலிப்பைன்ஸில் தேர்தல் ஒன்றினை நடாத்துமாறு மார்க்கோசை அமெரிக்கா வற்புறுத்தியது. மக்களின் எதிர்ப்பு வலுப்பட்டிருந்தமையும், புதிய மக்கள் படையின் நடவடிக்கைகள் அதிகரித்து வந்தமையும், பிலிப்பைன்ஸில் அமெரிக்க இராணுவம் நிலை கொண்டிருந்தமையும் மார்க்கோசை மரணப்பிடியினுள் அமிழ்த்தின. தேர்தல் வைக்க உடன்படாவிடில் பிலிப்பைன்ஸில் இருந்த அமெரிக்க இராணுவம் மூலம் தான் இலகுவாகப் பதவியில் இருந்து கவிழ்க்கப்படலாம் என்பதனை உணர்ந்த மார்க்கோஸ் தேர்தல் ஒன்றினை வைப்பதற்கு உடன்பட்டார். இதன்படி 7-02-1986இல் பிலிப்பைன்ஸில் தேர்தல் நடாத்தப்பட்டது.

தேர்தலின் போது இடம் பெற்ற ஊழல்களின் விளைவாக மக்களின் கூடுதலான ஆதரவினைப் பெற்ற திருமதி. அக்கியுனோ வெற்றியடைய முடியவில்லை. மார்க்கோஸ் ஆட்சியால் அதிருப்தியுற்றிருந்த மக்கள் தமது அதிருப்தியினை தேர்தல் மூலம் வெளிப்படுத்தி, ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்த முன்னின்ற போது நடைபெற்ற இம் மோசடி மக்களின் ஆத்திர உணர்வினைத் தூண்டி விட்டது. மக்கள் ஆவேசமாக தெருக்களில் இறங்கினர். படையினர் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தனர் மக்கள் எழுச்சியினால் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடி மார்க்கோசை நாட்டை விட்டுத் துரத்தும் அளவிற்கு வளர்ச்சியடைந்தது. ஈரானிய அனுபவத்தை உள்வாங்கிச் செயற்பட்ட அமெரிக்கா தொடர்ந்தும் மார்க்கோசை ஆதரித்தால் மார்க்கோசுடன் சேர்ந்து- தானும் தூக்கியெறிபட வேண்டி வரும் என்பதனை உணர்ந்து மக்களுடன் இணைந்து கொண்டது. பிலிப்பைன்ஸ் தேர்தலில் ஊழல்கள் இடம் பெற்றதாகவும் மார்க்கோஸ் பதவி விலக வேண்டுமெனவும் பகிரங்கமாக அறிவித்தது. பதவி விலகாவிட்டால் எதிர்நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக மார்க்கோசை அச்சுறுத்தியது. மக்களின் எழுச்சியும் அமெரிக்காவின் அச்சுறுத்தலும் இணைந்து மார்க்கோசை பிலிப்பைன்ஸில் இருந்து தப்பியோடவைத்தது.

இத் தருணத்தில் உலக வரலாற்றில் ஒரு முக்கியமான விடயத்தையும் பிலிப்பைன்ஸ் மக்கள் உலகிற்கு உணர்த்தினர். மார்க்கோசிற்கு எதிராகச் செயற்பட்ட படையினரை தாக்குவதற்கு மார்க்கோசிற்கு விசுவாசமான படைகள் முயன்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றது. ஆயுதங்களை தம்வசம் கொண்டிருந்த, மார்க்கோசிற்கு எதிரான படைகளை காப்பாற்றுவதற்காக பெருந்தொகையான மக்கள் கைகளில் பூச் செண்டுகளுடன் படையினரைச் சூழ்ந்து கொண்டனர். மார்க்கோசிற்கு எதிரான படையினரைச் தாக்க முயன்ற மார்க்கோசிற்கு ஆதரவான படைகளை நோக்கி மக்கள் பூச்செண்டுக வீசினர். ஆயுதத்தினை தம்வசம் கொண்டிருந்த ஆயுதப் படையினரை காப்பாற்றுவதற்காக பெரும் தொகையான மக்கள் கைகளில் பூச் செண்டுகளை கொண்டு வீதிகளில் இறங்கியமையும், ஒரு நாட்டின் ஆயுதப்படையினரில் ஒரு பிரிவினர் மக்களால் காப்பாற்றப்பட்டமையும் உலக வரலாற்றில் முதன் முதலாக பிலிப்பைன்ஸில் இடம் பெற்றது.

மார்க்கோஸ் பிலிப்பைன்ஸில் இருந்து வெளியேறிய பின்னர், பிலிப்பைன்ஸ் மீது அமெரிக்கா மேற்கொண்ட சுரண்டல்களுக்கு மார்க்கோஸ் எனும் தனி மனிதர் காரணமாக்கப்பட்டார். சுரண்டலின் சூத்திர தாரியான அமெரிக்கா நபரை மாற்றியதனூடாக தன்னை பிலிப்பைன்ஸில் நிலை நிறுத்திக் கொண்டது. நவகாலனித்துவத்திற்கு ஒரு புதியசேவகன் பிலிப்பைன்ஸில் உருவாக்கப்பட்டுள்ளார். பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் துரத்தியடிக்கப்பட்ட நிகழ்வு உண்மையில் மக்களின் வெற்றியல்ல. இதில் ஆட்சி மாற்றம் எனும் நடவடிக்கையின் ஊடாக மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 30-ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| திகதி | தாக்குதல் நடந்த இடம் | உயர் அதிகாரிகளின் பெயர் விபரம் | தாக்குதலில் ஈடுபட்ட இயக்கம் |
|---|---|---|---|
| 31-1-86 | அக்கரைப் பத்தனை (மலையகம்) | பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த டி சில்வா | — |
| 19-2-86 | தெஹிவத்தை திருமலை | இராணுவ சார்ஜன்ட் எதிரி சிங்கா | விடுதலைப் புலிகள் |
| 25-2-86 | தள்ளாடி மன்னார் | ஒரு இராணுவ லெப்டினன்ட் | விடுதலைப் புலிகள் |
| 2-3-86 | பம்பைமடு வவுனியா | இராணுவ சார்ஜன்ட் அமிதா வீரசேன | ஈ.பி.ஆர் எல். எவ் |
| 3-3-86 | நயினாதீவில் கடலில் கண்ணிவெடித் தாக்குதல் | கடற்படை உயர் அதிகாரி ஒருவர் பலி | விடுதலைப் புலிகள் |
| 14-3-86 | பாலம் போட்டாறு கொட்டியா மதகு திருமலை | 2 கடற்படை அதிகாரிகள் பலி | விடுதலைப் புலிகள் |
| 25-3-86 | கந்தளாய் | லெப்டினன்ட் ஹெட்டி ஆராய்ச்சி | விடுதலைப் புலிகள் |
| 28-3-86 | கன்னியா திருமலை | லெப்டினன்ட் சொலமன் | ,, |
| 2-4-86 | பதினெட்டாம் போர் கொக்காவில் | லெப்டினன்ட் எம். ஜி. மல்லவராச்சி | விடுதலைப் புலிகள் |
| 8-4-86 | தொண்டமானாறு [இராணுவ முகாம்] | இராணுவ கப்டன் ஜெயவர்த்தனா | விடுதலைப் புலிகள் |
| 9-4-86 | தலைமன்னார் (பியர் பகுதியில்) | தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பராக்கிரமபெரேரா | — |
| 16-4-86 | மியாங்கல் சந்தி வாகரை மட்டக்களப்பு | இராணுவ ரோந்துப் பொறுப்பாளர்கள் 1. அன்வர்தீன் 2. ரி. ஜே. சகாயபந்து | விடுதலைப் புலிகள் |
| 18-4-86 | பொத்துவில் நகரம் | ஏ. டி. எச். ரோகண (சப்-இன்ஸ்பெக்டர்- STF) | — |
| 18-4-86 | முதலிக்குளம் (மொரவெவ) திருகோணமலை | 1. ஏயாலீடர் கிறஷல் பெக் 2 ஏயாலீடர் பெர்ணண்டோ இவர்களைவிட மேலும் 4 விமானப்படை தொழில் நுட்பவியலாளர்கள் பலியானார்கள். | விடுதலைப் புலிகள் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களுக்காய் மரணித்தவன்!

## சேதுநாயகம்- இரவீந்திரராஜா

(முதலாம் வருட விஞ்ஞான பீடமாணவன்—யாழ் பல்கலைக்கழகம்)



பிறப்பு:- 03-08-1965
இறப்பு:- 16-04-1986

......... இவனது வரலாறு எம்மால் திரும்பிப் பார்க்கப் பட வேண்டியது. எமது விடுதலைப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு என்ன என்பது குறித்து வாதப் பிரதிவாதங்கள் எழும் இவ் வேளையில் இவனது வாழ்வு சில உண்மைகளை எமக்குப் புலப்படுத்துகின்றது. இரவினில் மக்களின் விடிவிற்காய் கொட்டும் மழையிலும் கடும் பனியிலும் விழித்திருந்து, பகலில் விரிவுரை மண்டபத்தில் தூக்கக் கலக்கத்துடன் விரிவுரைகளைத் தொடர்ந்த இவனது செரில்லா வாழ்வு, கிடைக்கக் கூடிய ஓய்வு நேரத்தில் அறிவினை வளர்த்துக் கொள்வதற்கு நூலகத்தைப் பயன் படுத்துவதில் இவன் காட்டிய ஆர்வம், மக்கள் மத்தியில் அரசியல் தெளிவினை ஏற்படுத்த வேண்டும் என்பதில் இவன் கொண்ட அக்கறை இவையனைத்தும் நாம் படிப்பதற்கு இவன் விட்டுச் சென்ற பாடக் குறிப்புகள். விரிவுரை மண்டபமே தஞ்சம் எனக் கொள்வோரும், தமது சுய நலன்களுக்காக இயக்கத் தவறுகளைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொள்வோரும், விரிவுரை மண்டபங்களையும் சுயநல அடித் தளங்களையும் விட்டு சற்று வெளியே வந்து பார்த்தால் இவனது வாழ்வின் அர்த்தம் புலப்படும்.

- யாழ். பல்கலைக்கழக மாணவரவையின் பிரசுரத்திலிருந்து -

### மக்கள் சக்திக்கஞ்சி . . .

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

நவகாலனித்துவத்தினதும் வெற்றியாகவே அமைந்துள்ளது. புதிய ஜனாதிபதி திருமதி அக்கியுனோ சர்வாதிகாரியாகத் தொழிற்படுகின்றார் எனும் குற்றச்சாட்டு இப்போதே எழத் தொடங்கியுள்ளது. மக்கள் மீதான சுரண்டலும் ஒடுக்கு முறைகளும் தொடரும் என்பதும் நவகாலனித்துவம் பிலிப்பைன்ஸில் தன்னை நிலை நிறுத்தி மேலும் தன்னை வளப்படுத்தும் என்பதும் பலராலும் எதிர் பார்க்கப்படுகின்றது. ஆனால் சுரண்டலையும் ஒடுக்கு முறைகளையும் தொடர்ந்து மக்கள் சக்தி அனுமதிக்க மாட்டாது எனும் வரலாற்று உண்மை. திருமதி அக்கியுனோவின் ஆட்சிக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதனை எமக்கு உணர்த்துகின்றது. ★

**வீரமரணமடைந்த நித்தி**
**யாழ் - பல்கலைக்கழக மாணவனும் விடுதலைப் போராளியும் எமது நண்பனுமாகிய நித்தியானந்தனுக்கு [அலெக்ஸ்] எமது வீர வணக்கங்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்களுக்குத் தேவையான

❋ பட்டுப் பிடவைகள்

☐ சேட்டிங்

★ சூட்டிங்

மற்றும்

சிறுவர் சிறுமிகளுக்கான

ஆடை வகைகளுக்கு

நாடுங்கள்

↓

**மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்**

50, பெரியகடை

யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான

துணி வகைகளுக்கு

நாடுங்கள்

**சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

172, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 23713

மாணவ உலகிற்கு மகத்தான வரப்பிரசாதம்

# NIRU TUTION CENTRE

*STATION ROAD,*
*KONDAVIL.*

Branch:-
*KOKUVIL.*

**A/L 1988 கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

யாழ். முன்னணி ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்துகின்றனர்.

**O/L**
அதிகாலை நேர வகுப்பு
மாலை நேர வகுப்பு
பகல் முழு நேர வகுப்புகள்

**9, 8, 7, 6, 5-ம் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.**

விபரங்கட்கு
நிர்வாகி
NIRU TUTION CENTRE


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்